# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone : No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு ஆனிமாதம் 3-ந் திகதி சனிக்கிழமை — பிரிதிசதம் 12 | 21-ம் இலக்கம்


# பெந்தெக்கோஸ்து திருநாளன்று பாப்பரசர்

## 14 புதிய மேற்றிராணிமாரை அபிஷேகம் செய்தார்

சென்றமாதம் 21-ந் திகதி திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரின் திருநாளன்று நம்பரிசுத்த தந்தை வேதபோதக நாடுகளுக்குரிய 14 மேற்றிராணிமார்களுக்கு அர்ச். இராயப்பரின் மகாலயத்தில் பட்டாபிஷேகம் அளித்துள்ளார். இவர்களுள் இருவர் இந்தியர்; ஏனையோர், பேர்மா, போர்மோசா, கினியா, தங்கனீக்கா, பசுற்றோலண்டு, அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், அயர்லாந்து ஆதியாம் நாடுகளைச் சேர்ந்தவர்கள். அபிஷேகச்சடங்குக்கு அதிவந். புல்ரன் ஷீன் ஆண்டகை அவர்களும், அதிவந். லாபிறி ஆண்டகை அவர்களும் பாப்பரசருக்குத் துணைபுரிந்தனர்.

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள புதுவேதநாடுகளில் திருச்சபையின் ஆட்சிஅதிகாரவரிசை நிறுவப்பெற்றதை முன்னிட்டுத் தாம் திருப்தியடைவதாகப் பரிசுத்ததந்தை தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியான ஜோண் கென்னடியின் இளைய சகோதரரான எட்வேட் கென்னடியும் இத்திருச்சடங்குக்குச் சமுகமளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாப்பரசரது விஞ்ஞான மன்றத்திற்குப் பத்துப் புதிய உறுப்பினர்

பாப்பரசரது விஞ்ஞானமன்றத்துக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட 10 விஞ்ஞானிகளில் மூவர் பிரித்தானியராவர்.

1. சேர் சிறில் ஹின்சல்வூட். இவர் றோயல் சங்கத்தின் தலைவரும், ரசாயன சாஸ்திரத்தில் நோபெல்பரிசு பெற்றவருமாவர்.

2. சேர் யேம்ஸ் காட்விக். இவர் கேம்பிறிஜ் கொண்வில், கேயஸ் கல்லூரிகளில் வித்துவ பட்டம் பெற்றவர்.

3. சேர் றோனல்ட் பிஷர். இவர் கேம்பிறிஜ் சர்வகலாசாலையில் மனிதஇன ஆராய்ச்சிப்பேராசிரியராவர்.

ஏனைய ஏழுபேரும் இத்தாலி, அமெரிக்கா, போர்த்துக்கல், டென்மார்க், அவுஸ்திறேலியா, ஜப்பான் ஆதியாம் நாடுகளைச் சேர்ந்தவர்கள். பாப்பரசரது விஞ்ஞான மன்றமானது 17-ம் நூற்றுண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. 1936-ம் ஆண்டு 11-ம் பத்திநாதபாப்பரசரால் புதுமுறையில் திருத்தியமைக்கப்பட்டது. இது விஞ்ஞான ஆராய்ச்சியாளரைக்கொண்டது. உலகிலுள்ள தலைசிறந்த விஞ்ஞானிகளிலிருந்தே இந்த விஞ்ஞானமன்றத்துக்குப் பாப்பரசரால் விஞ்ஞானிகள் தெரிவுசெய்யப்படுவர். இந்த விஞ்ஞானிகள் யாவரும் கத்தோலிக்கராகவே இருக்கவேண்டுமென்ற நிபந்தனையில்லை தற்போதுள்ள 56 உறுப்பினருள் 41 பேர் மட்டுமே கத்தோலிக்கர். நோபெல்பரிசுபெற்ற 18 பேர் இம்மன்றத்தில் இடம்பெற்று விளங்குகின்றன.

## பாத்திமாபதியில் 5 இலட்சம் யாத்திரிகர்கள்

பாத்திமாபதியில் தேவதாயார் காட்சியளித்த 44-வது ஆண்டு விழாவில் 5,00,000 மக்கள் சமுகமளித்தனர். பிரித்தானிய யாத்திரிகர்களும் இந்தவிழாவில் கலந்துகொண்டனர். பாப்பரசரின் ஸ்தானுபதியான கருதினுல் திருலியா ஆண்டகைஅவர்கள் பாத்திமாவில் நடைபெற்ற மூன்றுநாள் கொண்டாட்ட வைபவங்களுக்கும் தலைமைதாங்கினுர். பாத்திமா திருசேத்திரத்தைச் சுற்றியுள்ள பீடங்களில் 70,000-க்கு அதிகமானேர் திருவிருந்தருந்தினர்.

## முத். மாட்டின் டி பொறெசுக்கு விரைவில் அர்ச்சியசிட்டர்பட்டம் கிடைக்கக்கூடும்

அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட முத். மாட்டீன் டி போறெசுடைய இருபுதுமைகளும் ஏற்றுக்கொள்ளப்படின், அவருக்கு இந்த இலையுதிர்காலத்தில் அர்ச். பட்டம் சூட்டப்படுமென்று காத்திருக்கலாம். முத். மாட்டீன் டி போறஸ் அரை நூற்றுண்டுகளாகப் புனிதமாகவைத்திருந்த சந்நியாசமடத்தைத் தரிசிக்கச் சான்றோடொமின்கோ நகருக்கு வாரந்தோறும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வந்து கொண்டிருக்கிறுர்கள். முத். மாட்டீன் டி போறஸ் இந்தச் சந்நியாசமடத்தில் 1639-ம் ஆண்டு மரித்தார். அப்போது அவருக்குவயது 59. அக்காலத்தில் அந்தமடத்தில் 300 டோமினிக்கன்சபைச் சந்நியாசிகள் இருந்தனர். இன்று அங்கு 22 சந்நியாசிகளே உளர். இது பீறுவில் உள்ள சந்நியாசிகளின் பற்றுக்குறைக்கு எடுத்துக்காட்டாகும். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் முத். மாட்டீன் டி போறெசுடைய பேரினுல் அவரதுமகிமைக்காகத் திவ்வியபூசை ஒப்புக்கொடுக்கப்படும். பீறுவிலிருந்து யாத்திரிகர்கள் அங்கு பூசையில் கலந்துகொள்வதற்காக வருவர்.

## கியுபாவின் கருதினுல் ஆண்டகை எங்கே?

ஹவானுவின் அதிமேற்றிராணியாரும் கருதினுலுமான ஆற்றீயாகா பெற்றுன்கோட் ஆண்டகை அவர்கள் எங்கே என்பது மர்மமாயிருக்கின்றது. அவர் ஆர்ஜன்ரீன தூதுவராலயத்தில் சரண் புகுந்துள்ளதாக வெளியான செய்தி மறுக்கப்பட்டுள்ளது. கஸ்திரோவின் கியூபாவிலிருந்து வரும் அகதிகள் கருதினுல்ஆண்டவரவர்கள் ஒருபிறநாட்டுத் தூதுவராலயத்தில் இருப்பதாகக் கூறுகிறுர்கள். ஆனுல், அச்செய்தி ஊர்ஜிதமாகவில்லை. ஒன்பது மேற்றிராணிமார் தடுப்புக்காவலில் இருக்கவேண்டும், அன்றேல் பிறதேசங்களின் தூதுவர்கள் காரியாலயங்களில் சரண் புகுந்திருக்க வேண்டுமென்று அவ்வகதிகள் கூறுகின்றனர். சந்தியாகோடி கியூபாவின் அதிமேற்றிராணியாரான அதிவந். செரான்ரஸ் ஆண்டகைஅவர்கள் மாத்திரமே கைதுசெய்யப்படாது சுதந்திரமாய் இருக்கும் ஒரேயொரு மேற்றிராணியாராவர்.

## போலாந்தில் சற்பிரசாத சுற்றுப்பிரகாரம் தடை செய்யப்பட்டுள்ளது

வழமைப்பிரகாரம் நடைபெற்றுவரும் திவ்விய சற்பிரசாதத் திருநாள் சுற்றுப்பிரகாரங்களைப் போலாந்து கொம்யூனிஸ்த அரசாங்கம் இம்முறை தடைசெய்துள்ளது.

அண்மையில் வத்திக்கான் திருநாள் அட்டவணையில் சிலதிருநாட்களைமாற்றியும், இல்லாமல் நீக்கியும் செய்ததிருத்தத்தோடு தொடர்புறுத்தி அதற்கேற்பதாங்களும் சற்பிரசாத சுற்றுப்பிரகாரங்களை தடைசெய்ததாகக் காரணங்கற்பிக்கிறுர்கள் போலாந்து அரசாங்கத்தினர்.

போலாந்து மேற்றிராணிமார் இத்தடையை ஆட்சேபித்து, வத்திக்கான் அண்மையில் திருநாட்களில் ஏற்படுத்திய மாற்றத்துக்கும், சற்பிரசாதசுற்றுப்பிரகாரங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

### அர்ச். சின்னப்பரின் 19-ம் நூற்றுண்டு விழா

அர்ச். சின்னப்பர் றோமாபுரிக்குவந்த 19-ம் நூற்றுண்டு ஞாபகத்தைக் குறிக்கும்பொருட்டு றோமாபுரியிலுள்ள சம்பாவிலுமாதேவாலயத்திலிருந்து அவருடைய சங்கிலிகள் பன்னிரு அப்போஸ்தலர்களின் ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு திரிதின ஆராதனைகள் நடாத்தப்பட்டது. திரிதினம் இவ்விடத்திலிருந்து 60 மைல்களுக்கப்பால், சம்பாவிலு அப்போஸ்தலர் கி. பி. 61-ம் ஆண்டு கிறீஸ்தவர்களால் முதன்முதல் வரவேற்கப்பட்ட இடமாகிய ரெருசினு என்னுமிடத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட தோடு முடிவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பாதுகாவலன்' பத்திராதிபரின்

# சேவைத் திறன்

எங்கள் யேசுபிரானின் பிரதிநிதியாகிய பாப்பரசர், கொழும்புத்துறை அர்ச். சூசையப்பர் பழைய மாணவர் சங்கத்திலிருந்து முதல் முதலாகத் தெரிந்தெடுத்த கிறிஸ்துவமுத்து சத்தியவேத பாதுகாவலன் பத்திராதிபர் அ. ஞானப்பிரகாசம் அவர்களேயாகும். இவர்களுக்குப் பாப்பரசரால் அளிக்கப்பட்ட "திருச்சபைக்கும், பாப்பரசருக்கும்" என்னும் அதிஉன்னத விருதானது இவர்களது அயராத கிறிஸ்தவ சேவையையும், புனிதவாழ்வையும், உகிர்த குணங்களையும் எம்மத்தியில் மாத்திரமல்ல, அகில கிறிஸ்துவ உலகம் முழுவதிலுமே பரவச் செய்துவிட்டது. இது கொழும்புத்துறைத் தாபனத்திற்கும், கொழும்புத்துறைப் பழையமாணவர் சங்கத்திற்கும் குறையாத மகிழ்வையும், நிறைவான பெருமையையும் தேடித் தந்துவிட்டதென்பதை எவராலும் மறுக்க முடியாது. இத்தாபனத்தின் நூற்றாண்டுச் சரித்திரத்தில் இதைவிடப் பொன் அட்சரத்தால் முதல்முதல் பொறிக்கப்பட்டவிடய மில்லையென்றே சொல்ல வேண்டும்.

மேளந்தட்டித் தருமம்செய்வோர் கூட்டம் அதிகம். துண்டுப்பிரசுரங்கள் பறக்கவிட்டுத் தானஞ்செய்வோர் பலர். அட்டதிக்கும் அறியச்செய்து ஆடம்பரச் சடங்குகளுடன் புண்ணியதானம் செய்யும் கூட்டம் பல. ஊர் கடந்து, கடல் கடந்து கும்பகோணத்தில் கோதானஞ் செய்யும் கும்பல் ஒன்று இரண்டல்ல. இந்த வரிசையிலே சேர்ந்தவரல்ல கனம், பத்திராதிபர் அவர்கள். 'சலசலப்பல்ல பலகாரமே தேவை' என்றார்கள் எம்முதாதையோர். 'இலைமறைகாய்' என்றார் ஓர் அறிஞர். 'செத்தாரைப்போலத் திரி' என்றார் ஓர் பெரியார். 'வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாது இருக்க வேண்டும்' என்றார் எங்கள் ஆண்டவர் யேசுக்கிறிஸ்து. ஆம், இவ்வாக்கிய வரிசையிலேதான் பத்திராதிபர் அவர்கள் தோன்றினார்கள். "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" என்னும் வள்ளுவ பெருமானின் வாக்கை நிறைவேற்ற வாழ்ந்தார்கள். சமய சமூக சேவையில் தமது அரும் பணியை அயராது ஆற்றிக்கொண்டே வருகின்றார்கள். கடைசி மூச்சுவரையும் இத்தியாகப்பணியைச் செய்தே தீருவார்களென்பது அவர்களிடத்தில் காணப்படும் 'தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளன்' என்னும் பெரும் பண்பு சுட்டிக் காட்டுகின்றது.

இவர்களிடத்தில் இன்னும் எத்தனையோ அரும்பெருங் குணங்கள் உறைந்து கிடக்கின்றன. குணத்தின் குன்றாகவும், குணவிளக்கின் ஒளியாகவும் விளங்குகின்றார்கள் என்று சொன்னால் மிகையாகாது. பெருமைக்கேற்ற தொழில்தான். ஆனால், இவர்கள் பெருமையோடு வாழவிரும்பவில்லை. எடுபாடில்லாத தோற்றத்தை மேற்கொண்டார்கள். இடாம்பீகமற்ற வாழ்க்கையைக் கையாண்டார்கள். அன்பையும், அருளையும் அள்ளிச் சொரியும் பேச்சைத் தமது ஆயுதமாக உபயோகித்தார்கள். சூரியன் போன்ற தமது தூய உள்ளத்தொளியை எம் மத்தியில் பரப்பினார்கள். இவ்வற்புதமான வாழ்க்கை எவரைத்தான் இவர்பால் அன்புகொள்ளச் செய்யாது தப்பவிடும்.

ஓய்வு கிடைத்தால் போதும். ஒவ்வொரு கணமும் சமூக தொண்டாகவோ, தெய்வீகத் தொண்டாகவோ பரிணமித்துவிடும் நோயாளரைச் சந்திப்பதிலும், அறிவீனர்களைத் திருத்துவதிலும், வழிதப்பியவர்களை வழிக்குக் கொண்டுவருவதிலும், உற்றார் உறவினர், சிநேகிதர், பகைவர் எல்லோருக்காகவும் பிரார்த்திப்பதிலும், ஓடோடிக் கோயில் தரிசனம் செய்வதிலுமே இவர்களதுகாலம் கழிவதாகவிருந்தது.

நாற்பது ஆண்டுகளாக இவர்கள் பத்திராதிபராகக் கடமையாற்றுவதிலிருந்து இவர்களது அறிவையும், ஆற்றலையும், அநுபவத்தையும் எம்மால ஒருவாறு ஊகித்துக்கொள்ளமுடியும். இப்பத்திரிகை மூலமாக இவர்கள் சமயத்தொண்டு மாத்திரமல்ல, தேனும் பாலும் பழமும் கலந்தினிக்கும் இனிய தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் அரும் பாடுபட்டுவருகின்றார்கள். தமிழ் மொழியென்றும் தேன்மொழியாக வாழவேண்டும்; செந்தமிழ் நடைபோட்டுச் சீரிய நெறியில் இயங்க வேண்டும்; தமிழே தமது உயிரென ஓம்பித் தமிழ்க் கொலை நிகழாது கண்ணும் கருத்துமாகப் பத்திரிகையைக் கண்ணியமாக நடாத்தவேண்டுமென்னும் இலட்சியங்கள் பூத்துக் குலுங்கப் பணியாற்றிய பெருமை இவரையே சார்ந்ததாகும்.

இவ்வாறு இவர்கள் எழுத்திலும், பேச்சிலும், கிரிகையிலும் தேவனுக்கும், சமூகத்திற்கும் சேவை செய்வதையே தமது கடமையாகவும், வாழ்க்கை விருதாகவும் மேற்கொண்டார்கள். தமது உடல், பொருள், ஆவி யத்தனையையும் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அப்பர் திருவாக்குக்கு அடிமைப்படுத்திவிட்டாரென்றால் முழுதும் பொருத்தமுடையதாகும். வாழ்க இவர்கள்! வளர்க இவர்களது சேவையும், புகழும்!

**ஆசிரியர், ப. அருளானந்தம்**

---

### ஏத்துக்காலில்

## இரு தினங்கள்

நீர்கொழும்பில் இருந்து சுமார் ஒருமைல் தூரத்தில் அமைந்திருக்கும் கிராமம் ஏத்துக்கால். இக்கிராமத்தில் உள்ள அர்ச். சில்வேஸ்திரி முனியோர் ஆலயத்தில், இக்கிராமத்தில் வாழும் பரதகுல மக்களால் வைகாசித்திங்கள் பதினான்காம்நாள் திருஇருதயநாதரின் திருநாள் மகோற்சவம் நடைபெற்றது.

அன்றுகாலை, சுமார் 6-30 மணியளவில் திருஇருதயசபையார் தங்கள் சின்னம் பொறிக்கப்பட்ட கொடியுடன் கோயிலை நோக்கிப் பவனிவந்தனர். கோயிலை அடைந்த சிறிதுநேரத்தில் வெண்நிற மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தபீடத்தில், வண. கட்டளைக் குருவானவரால் திவ்விய பூசை ஒப்புக்கொடுக்கப்பெற்றது. பூசையின் பின், திவ்வியநற்கருணை ஸ்தாபகம் பண்ணப்பட்டது. அச்சமயம் தொடங்கி மாலை 4-30 மணிவரையும் ஆராதனைகள் நடைபெற்றன. ஈற்றில் மாலைஆராதனை பாடப்பட்டுத் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது.

அடுத்ததாக, வைகாசித்திங்கள் இருபத்திஓராம்நாள் புனிதவளனார் திருநாள் கொண்டாடப்பட்டது. திருநாளின் முன் திரிதின ஆராதனை நடைபெற்றது. 20-ந் திகதி மாலை 7 மணியளவில் வண. கட்டளைக் குரவரால் மாலை ஆராதனைபாடப்பட்டது. 21-ந் திகதி காலை 7 மணிக்குப் பெரியபாடற் பூசை நடைபெற்றது.

பிற்பகல் சுமார் 4 மணியளவில் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்த புனிதவளனார் திருச்சுரூபம் ஆலய மணிகள் ஆர்ப்பரிக்க, "பாண்ட்" வாத்தியங்கள் இன்னிசை இசைக்க, வெடிகள் அதிர, சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டுவரப்பட்டது. திருச்சுரூபம் ஆலயத்தை அடைந்ததும், திருச்சுரூப ஆசீர் அருளப்பட்டது. தேவநற்கருணை ஆசீர்வாதத்துடன் புனிதவளனாரின் திருநாள் இனிதே முடிவடைந்தது.

---

### கொழும்புத்துறை

# அர்ச். சூசையப்பர் திருநாளும்

## தாபனப் பழையமாணவர் சங்கமும்

கொழும்புத்துறை, அர்ச். சூசையப்பர் தாபனப் பழையமாணவர் கடந்த 27-5-61 சனிக்கிழமை தாபனப் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பர் திருநாளைப் பக்திச்சிறப்புடன் கொண்டாடினர்.

அவசரகால நிலைமையை முன்னிட்டு வழமைப்பிரகாரம் திரிதின ஆராதனைகள் நடைபெறவில்லை. திருநாளன்று அர்ச். சூசையப்பருடைய திருச்சுரூபமும் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச் செல்லப்படவில்லை.

திருநாளன்று காலை 7 மணிக்குத் தாபனத் தலைவர்சுவாமி வ. தியோகுப்பிள்ளை அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்ட பெரியபாடற்பூசைக்குப் பழைய மாணவர்கள் பெருந்தொகையினர் சமுகமளித்துத் திருவிருந்தருந்தினர். பூசையின்பின் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதமும் அளிக்கப்பட்டது.

காலை உணவின்பின் வருடாந்த பொதுக்கூட்டம் அதிவண. லெக்குத்தூர் சுவாமியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது கடந்த வருடம் பயிற்சி முடித்து ஆசிரியர்களாக வெளியேறியவர்களுக்கு ஆசிரிய தராதரப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

அவசர அலுவல் காரணமாக அதிவண. லெக்குத்தூர் சுவாமி அவர்கள் கூட்டத்தை விட்டுச் சென்றமையால் வண. சுவாமி தியோகுப்பிள்ளை அவர்கள் தலைமையில் பாப்பரசரின் மகிமை விருது பெற்றுக் கெளரவிக்கப்பட்ட ஆசிரியரும், எமது பழைய மாணவர் சங்க உபதலைவரும், பாதுகாவலன் பத்திராதிபருமாகிய திரு. அ. ஞானப்பிரகாசம் அவர்களுக்குப் பழையமாணவர்சார்பில் ஒருவரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்பின்போது ஆசிரியர்கள் திரு. ப. அருளானந்தம், திரு. ஜே. ஞேமான்என்பவர்கள் முறையேவாழ்த்துரைகள் கூறினின்றனர்.

கெளரவ பத்திராதிபர் அவர்கள் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்திற்கு நன்றியுரை கூறியபின் பழையமாணவர்சங்க அறிக்கை, வரவு செலவுக்கணக்குகள் வாசிக்கப்பட்டன. இளைப்பாற்றிநிதிச் சங்கத்தைக் கலைப்பதுபற்றிய ஆலோசனையின்போது சங்கத்தில் சேர்ந்த அங்கத்தவர்களின் கட்டுப்பணத்தை உடனே கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஈற்றில் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதினால் இற்றைவரை தம்மைக் கண்காணித்துப் பாதுகாத்து வந்த மகாவந்தனைக்குரிய யாழ்ப்பாண மேற்றிராணியாண்டகை அவர்களுக்கும், ஏனைய மேற்றிராசன அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்கு முகமாகப் பின்வரும் பிரேரணை பிரேரிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டதுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

"கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையானது, யாழ்ப்பாண மேற்றிராசனக் கத்தோலிக்க ஆசிரியர்களை மாத்திரமல்ல, அகில இலங்கைக் கத்தோலிக்க ஆசிரியர்கள் எல்லோரையும் பயிற்றும் பெருமை வாய்ந்தது. இத்தகைய பெருமைவாய்ந்த எங்கள் கலாசாலையை யாழ்ப்பாண மேற்றிராசன பீடமானது இதுகாலவரையும் மிகவும் அருமைப் பெருமையாக நடப்பித்து வந்ததை இச்சமயம் எங்கள் மனமார நினைத்தவர்களாய் எங்கள் நன்றிக் கடனை எவ்வகையாகச் செலுத்துவோம்என்று தவியாய்த் தவிக்கிறோம், துடியாய்த் துடிக்கிறோம்.

"மாரி மாட்டிவ்வுலகு என்னாற்றும்"

கொழும்புத்துறைப் பழைய மாணவர் சங்கமானது தனது நெகிழ்ந்த — குழந்தை உணர்ச்சிகள் நிறைந்த நன்றிக்கடனை மகாவந்தனைக்குரிய யாழ்ப்பாண மேற்றிராணியாண்டகை அவர்களுக்கும், மற்றும் மேற்றிராசன அதிகாரிகளுக்கும் இதயபூர்வமாகச் செலுத்துகின்றது."

---

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2819**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

காரைநகர்மேற்கு காரைநகர்

1. கந்தையா தம்பிப்பிள்ளையும்
2. பெண் செளந்தரமும்

— வழக்காளிகள்.

எதிராக

கொக்குவில்மேற்கு, யாழ்ப்பாணம்

1. தம்பு செல்லப்பாவும்,
2. வயித்தி இராமுவும்,
3. பெண் நாகம்மாவும்,
4. சடையர் வீரசிங்கமும்,
5. பெண் தங்கமுத்துவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2819-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக் காணிகளையும் 1961-ம்ஆண்டு ஆடிமாதம் 22-ம்திகதி (22-7-61) சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னால்விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,354 சதம் 15-உம் இன்னும் ரூபா 2,000-த்திற்குப் 12-5-59 தொடக்கம் 25-11-59 வரையும் 100-க்குப் 15வீத வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீதவட்டியும், கோட்டுச்செலவும். இதில் ரூபா 1,000 கொடுபட்டது. முத்திரைச்செலவு ரூபா 6.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய்க் கோயிற்பற்று ஆனைக்கோட்டையிலுறை "சாமிசாட்டி" ப. நி. இ. 5-உம், செய்பயிர் வான்பயிர்களும், வடக்கெல்லைக் காணியின் கிணற்றில்பங்கும், கிழக்கெல்லைக் காணியின்ஓரமாக வழிவாய்க்காலுரித்தும். எல்லை: கிழக்கு— ஒழுங்கை. வடக்கு — சின்னப்பு வயிரமுத்துவின் ஆதனம். மேற்கு — சின்னப்பு செல்லமுத்துவின் ஆதனம். தெற்கு—ஒழுங்கை. இதடங்கலில் கிழக்குப்பக்கமாக பா. நில. இலா. 2½.

2. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோயிற்பற்று, கொக்குவில் மேற்கிறை "கள்ளியும், கிளைக்கொக்கனும்" ப. நி. இ. 3-உம், வீடும், பயிர்வகைகளும். எல்லை: கிழக்கு — கந்தர் சடையரின் ஆதனம். வடக்கு — ஆறுமுகத்தான் அரியகுட்டியின் ஆதனம். மேற்கு — கந்தன் சுப்பனின் ஆதனம். தெற்கு — சடையர் வீரசிங்கம் கைம்பெண் தங்கமுத்துவின் மீதக் காணி. இதடங்கலில் வடக்குப்பக்கமாக பா. நில. இ. 1½-யும், தெற்கெல்லைக்குப் போகும் வழிப்பாதை பிறநீங்கலாக.

3. ஷை கொக்குவில் மேற்கிறை "கள்ளிக்கொக்கனும், கிளைக்கொக்கனும்" ப.நி. இ. 3-உம், வீடும், பயிர்வகைகளும், மற்றும் அதற்குச்சேர்ந்தவைகளும், மேற்குக் காணியில் கிணற்றுப்பங்கும், அதற்குச் சேர்ந்த வழிவாய்க்காலுரித்துகளும். எல்லை: கிழக்கு — கந்தர் சடையரின் ஆதனம். வடக்கு — வயித்தி இராமு பெண் கனகம்மாவின் ஆதனம். மேற்கு — கந்தன் சுப்பனின் ஆதனம். தெற்கு — சிவசம்பு மயில்வாகனத்தினுதனம். வழிப்பாதை உரித்துஉட்பட. இதடங்கலில் தெற்குப்பக்கமாக ப. நி. இ. 1½.

**தா. செல்லையா,**

கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## தேவநற்கருணைத் திருநாள்

நம்முடைய ஆசனக் கோவிலிலே தேவநற்கருணைத்திருநாள் நாளை 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமை போலக் கொண்டாடப்படும். காலை 7-15மணிக்குப் பெரியபாடற்பூசை நிறைவேறும். சாயந்தரம் வேஸ்பர் பாடியதன்மேல் திவ்வியநற்கருணைச் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமாகும். ஆனால் இம்முறை அது கார்மேல்கூடச் சிற்றாலய சந்தி வரை சென்று, பின்னர் கார்மேல்வீதிவழியாகப் பெருந்தெருபோய்ச்சேர்ந்து, அதன்மேல் குருமடச்சந்தியிலிருந்து ஆசனக் கோவிலைநோக்கிச்செல்லும் சம்பத்திரிசியார்கல்லூரிப்பெரியவாயிலில் அமைக்கப்பட்டிருக்கும் பீடத்தில் தேவநற்கருணையை எழுந்தேற்றஞ்செய்து ஆசீர்வாதம் அருளப்படும். அன்பின் தேவ்திரவியானுமானமாகிய அதிபூசித தேவநற்கருணையில் எழுந்தருளியிருக்கின்ற நமதுதெய்வீக அரசர் திருப்பவனியாக எழுந்தருளும் வீதிகளை அவற்றின் இருமருங்கும் வசிக்கின்ற மக்கள் அழகுறச்சிங்காரித்து, எமது திவ்வியநாதரை அன்பாகவரவேற்று, அவருடைய ஆசியைப் பெற்றுக்கொள்வார்களாக.

## பாடசாலைப் பிள்ளைகளுக்கு வரியா?

வருமானவரி இறுப்பவர்களாய் ஐந்துவயதுக்கும், பதினெட்டுவயதுக்கும் இடைப்பட்ட தங்கள்பிள்ளைகளைப் பாடசாலைகளில்விட்டுப் படிப்பிக்கிறவர்கள் கல்விவிருத்திக்கு நிதிஉதவுவதற்கென மற்றுமோர்வரி செலுத்தும்படி கேட்கப்படுவார்கள்போல் இருக்கிறது. இதுவிஷயமாய்க் கல்விமந்திரி காரியாலயம் ஆலோசித்துவருகிறது. இந்தப் புதிய உத்தேசதிட்டத்தின்கீழ் வருமானவரியிறுக்கும் குறைந்தவருமானமுள்ளவர்கள் தங்கள்குடும்பத்திலுள்ள நான்குபிள்ளைகளிலே ஒருபிள்ளைக்கு வருடம் ஒன்றுக்கு 100ரூபாவும், வருமானவரியிறுக்கும் கூடுதலான வருமானமுள்ளவர்கள் தங்கள்குடும்பத்திலுள்ள ஐந்துபிள்ளைகளிலே ஒரு பிள்ளைக்கு வருடம்ஒன்றுக்கு 500 ரூபாவும் வரியாகக்கட்டும்படி கேட்கப்படலாம். இந்தவரியால் சேரும்பணம் கல்விவிருத்திக்கென்று செலவிடப்படும். தற்போது கல்விச்செலவுக்கென்று அரசாங்கம் ஒதுக்கும்பணமானது அதிகரித்துவரும் கல்விச் செலவுகளைச் சமாளிக்கப் போதியதாயில்லையென்றும், பழுதடைந்துள்ள பெருந்தொகையான கிராமப்பாடசாலைகளைத் திருத்தியமைக்கவும், வருடம்ஒன்றுக்கு இரண்டரைஇலட்சம் பாடசாலைப்பிள்ளைகளுக்கு இடவசதியளிக்கவும், பயிற்றப்படும் ஆசிரியர்களின்தொகையை அதிகரிக்கச் செய்ய அதிகமான ஆசிரியபயிற்சிக் கலாசாலைகளை அமைக்கவும், மற்றும் பலதேவைகளைச் சமாளிக்கவும் வேண்டியிருக்கிறதென்றும் கல்விமந்திரிகாரியாலயம் நியாயம்சொல்லுகின்றது.

## அவசரகாலநிலைமை

சனப்பிரதிநிதிகள்சபையிலே சென்ற வெள்ளிக்கிழமை திரு. டபிள்யு. தஹநாயக்கா கேட்டஒருகேள்விக்குச் சபைமுதல்வர் திரு. சி. பி. டிசில்வா பதிலளிக்கையில், பாராளுமன்றதொடர் கூட்டம் எப்போது கலைக்கப்படுமென்று இப்போது திடமாகச்சொல்ல முடியாது; இந்தஆனிமாதத்து முதல் வாரத்தின் பிற்பகுதியிலே இதுபற்றிக் கூறமுடியும்; ஆனிமாதத்திற்குப்பின் அவசரகாலநிலைமை என்னவாகுமென்று சொல்லமுடியாது; ஆனால், ஆனிமாதத்தில் அவசரகாலநிலைமையை நீடிக்கச்செய்யவேண்டிய நிலைமை இல்லையென்று நம்புகிறேனெனக்கூறலாயினர்.

## பாடசாலைகளும் விடுமுறைநாட்களும்

எந்த ஒருமதஸ்தாபனத்தையும் சேர்ந்த மாணவர்களிலே சரியாய் 60 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகள் கல்விமந்திரிகாரியாலயம் அங்கீகரித்துள்ள ஒரு திட்டப்படி தற்போதுள்ள விடுமுறை நாட்களுடன் சமய அடிப்படையிலே மேலும்ஐந்துவிடுமுறைநாட்கள் அருளப்படவிருக்கின்றன. இந்தவிடுமுறை நாட்கள் பின்வருமாறு;

60சதவிகிதத்திற்கு மேற்பட்ட புத்த மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளுக்கு பௌர்ணமி-போயாநாட்கள் ஐந்தும்,

60சதவிகிதத்திற்குமேற்பட்ட இந்து மாணவர்களைக்கொண்டுள்ள பாடசாலைகளுக்கு விஜயதசமி, ஆடி அமாவாசை, தைப்பூசம், மகாசிவராத்திரி, உள்ளூர்க் கோவில்விழாத்தினம் ஐந்தும்,

60சதவிகிதத்திற்குமேற்பட்ட ரோமான்கத்தோலிக்க மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளுக்கு விபூதித்திருநாள் புதன்கிழமை, பெரியவியாழன், கர்த்தரின் ஆரோகணத்திருநாள், உத்தரிக்கிறஸ்தலஆத்துமாக்கள் திருநாள், மார்கழிஏழாந்திகதிக்கு முந்திய வெள்ளிக்கிழமை ஐந்தும்,

60சதவிகிதத்திற்குமேற்பட்ட முஸ்லீம்மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளுக்கு முகாம், மிஹராஜ், மூன்று ஹஜ்ஜுப்பெருநாள் தினங்களாகிய ஐந்தும்,

60சதவிகிதத்திற்கு மேற்பட்ட ரோமான்கத்தோலிக்கர்அல்லாத கிறீஸ்தவ மாணவர்களைக்கொண்டுள்ள பாடசாலைகளுக்கு விபூதித்திருநாள் புதன்கிழமை, பெரியவியாழன், பரமேறிய திருநாள், உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமாக்களின்திருநாள், ஸ்தாபகர்தினம்ஐந்தும்.

## சீமெந்துத் தொழிற்சாலை

காங்கேசன் சீமெந்துத்தொழிற்சாலையின் சீமெந்துஉற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக அதனைவிசாலமாக்கும் வேலைக்கென்று அரசாங்கம் 44கோடிரூபாவரை செலவிடத் தீர்மானித்துள்ளது. இதற்கென அது கடன் உதவி கோரி ஜேர்மன் சமஷ்டிக் குடியரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதுசம்பந்தமாக ஜேர்மனியிலுள்ள புனருத்தாரண கடன்கார்ப்பரேஷன் தூதுக்கோஷ்டி ஒன்று இலங்கைவந்துள்ளது. இந்தத்தூதுக் கோஷ்டி மீண்டும் ஜேர்மனிபோய்ச் சேர்ந்ததும் கடனுதவிபற்றிய விபரங்கள் நிர்ணயிக்கப்படும். செலவிடப்படவிருக்கும் 44கோடிரூபாவில் சுமார் 22கோடிரூபா பிறநாட்டுக்கடனாய் இருக்குமெனத் தெரியவருகிறது.

## பிரதிநிதிகள்சபையின் புதியசாதனை

சென்றவியாழக்கிழமை பகல்இரண்டு மணிக்குக்கூடிய சனப்பிரதிநிதிகள் சபை அன்று இரவுமுழுவதும், மறுநாள்வெள்ளிக்கிழமை ஒருமணிவரையும் தொடர்ந்துகூடலாயிற்று. இதற்கு முன் சபை இவ்வளவு நீண்ட நேரம் அதாவது 23மணித்தியாலம் தொடர்ச்சியாகக் கூடியதே கிடையாது. அத்துணைநெடுநேரம் சபைக்கூட்டம் நீடித்தமையால் எம். பி. களும், மந்திரிகளும் இடையிடையே சபாமண்டபத்தினின்றும் வெளிகொண்டு தூங்கிவழிவதும், பின்னர் 'கோறம்' மணியடிக்க எழுந்தோடிவருவதுமாய்க்காட்சியளித்தார்கள். காலிப்பிரதிநிதி திரு. டபிள்யு. தஹநாயகா சபையிலிருந்து ஒருவாரகாலத்திற்கு விலக்கப்பட்டதும், சபாமண்டபத்திலிருந்து வெளியே தூக்கிச் செல்லப்பட்டதும் சரித்திரப்பிரசித்தி பெற்ற இந்தக்கூட்டத்தில்தான்.

## நன்றியறியறிந்த தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவின் இரக்கத்தினாலும், 12-ம்பத்திநாதரின் வேண்டுதலினாலும் நான் கேட்டுக்கொண்ட மன்றாட்டு அனுகூலமானது. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். மென்மேலும் அவர்களின் மன்றாட்டை இரந்து நிற்கிறேன். பிரசுரதாமதத்திற்கு மன்னிப்புக் கோருகிறேன்.

மூலாயா மிசெஸ் யோசவ்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2306

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

மானிப்பாய் தெற்கு
1. எஸ். அழகானந்தமும்
2. பெண் சகுந்தலாவும்

— வழக்காளிகள்.

எதிராக, கொக்குவில் கிழக்கு
1. பொன்னம்பலம் அப்பையாவும்
2. பெண் தங்கம்மாவும்
3. செல்லப்பா ஆறுமுகமும்
4. பெண் அன்னலெட்சுமியும்

— எதிராளிகள்.

1. நல்லையா இராசநாயகமும், பெண் கமலலெட்சுமியும்.
உருமபிராய்
2. வல்லிபுரம் அப்பாத்துரையும்,
3. பெண் தங்கரெட்டினமும்.
யாழ்ப்பாணம், ஒட்டுமடம்
4. கந்தப்பசேகர் இரத்தினசபாபதி
கொக்குவில் கிழக்கு
5. கார்த்திகேசு வைத்திலிங்கம்
6. செல்லப்பா ஆறுமுகமும்,
7. பெண் அன்னலெட்சுமியும்.
வெள்ளவாய்க்கால் நல்லூர்
8 வைரவி வேலுவும்.]

— வெளிப்படுத்தப்பட்டபகுதியார்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2306-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை 1961-ம் ஆண்டு ஆடிமாதம் 29-ம் திகதி (29-7-61) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அந்தந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 12,380-உம், இன்னும் ரூபா 8,000-த்திற்கு 1958-ம்ஆண்டு ஆடிமாதம் 1-ந் திகதி தொடக்கம், 1959-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 9-ந்திகதிவரையும் 100-க்குப் 12%வட்டியும், பின்புகூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 437-70 சதமும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் கோயிற்பற்று, கொக்குவில் கிழக்குஇறை "நம்பிச்சம்புலுக்கும், மறுபிரிவுகளும்" பர. நில. இலா. 44-உம், குழி $8\frac{15}{16}$-உம், கிணறும், பயிர்வகைகளும், வடக்கேயுள்ள கைஒழுங்கையில்பங்கும். எல்லை: கிழக்கு —கே. நன்னித்தம்பியின் உரித்தாளரின் ஆதனம். வடக்கு—சின்னத்தம்பி ஐயாத்துரையின் உரித்தாளரின் ஆதனமும், கை ஒழுங்கையும். மேற்கு—சின்னப்பு ஆழகக்கோனுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். தெற்கு—சிதம்பரப்பிள்ளை சரவணமுத்துவுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும் முற்பதிவு D. 222 | 184

2. ஷெ கொக்குவில் கிழக்கு இறை "அல்லைக்காடு" பர. நில. இலா. 33-உம், குழி $9\frac{5}{8}$-உம், இதில் 1948-ம்ஆண்டு தைமாதம் 25-ந் திகதி உலாந்தா மேஸ்தர் T. சின்னத்துரை அவர்களால் 235 B இலக்க அளவுப்படத்தில் 2 என்னும்இலக்கத்தால் சுட்டப்பட்ட, பிரிவிடப்பட்ட துண்டு ப. நி. இ. 2. குறித்த 2 என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்ட துண்டிற்கு எல்லை: கிழக்கு—றேட்டு. வடக்கு—1-ம் நம்பர் துண்டு. மேற்கு — ஆறுப்பிள்ளை கந்தையாவிற்கும், பெண் இராசேஸ்வரிக்கும் உரிய ஆதனங்களும், இராமு செல்லத்துரையின் ஆதனங்களும். தெற்கு—3-ம் நம்பர் துண்டு. இதடங்கலும். முற்பதிவு D. 192 / 141.

3. ஷெ கொக்குவில் கிழக்கு இறை "அல்லைக்காடு" பர. நில. இலா. 33-உம், குழி $9\frac{5}{8}$-உம், இதில் 1948-ம்ஆண்டு தை மாதம் 25-ந் திகதி உலாந்தா மேஸ்தர் T. சின்னத்துரை அவர்களால் 235 B இலக்க அளவுப்படத்தில் 1என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்ட, பிரிவிடப்பட்ட துண்டு ப. நி. இ. 3, குழி $9\frac{5}{8}$. குறித்த 1 என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்ட துண்டிற்கு எல்லை: கிழக்கு — றேட்டு. வடக்கு—ஆறுப்பிள்ளை கந்தையாவிற்கும், பெண் இராசேஸ்வரிக்கும் உரிய ஆதனம். மேற்கு—ஆறுப்பிள்ளை கந்தையாவிற்கும், பெண் இராசேஸ்வரிக்கும் உரிய ஆதனம். தெற்கு — இரண்டாம் நம்பர் துண்டு. இதடங்கலும் முற்பதிவு D. 165 | 128.

தா. செல்லையா,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37. கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the Intestate estate of Manickam Ponnudurai of Valvettiturai.

Deceased.

Testamentary Jurisdiction } No. 967

Packialedchumi widow of Manikam Ponnudurai of Valvettiturai

Petitioner.

Vs.

1. Ponnudurai Nithiyandavel,
2. Ponnudurai Balasubramaniam,
3. Ponnudurai Sathanandavel,
4. Ponnudurai Sanmuganathan,
5. Mahaledchumy daughter of Ponnudurai,
6. Rasaledchumy daughter of Ponnudurai,
7. Navaledchumi daughter of Ponnudurai,
8. Ramalingam Kanthasamithurai, presently of Chief Engineer's Office, P. O. Box 503, Colpetty, Colombo.

Respondents.

This matter coming on for disposal before C. Thanabalasingham, Esquire District Judge of Jaffna on the 6th day of April 1961 in the presence of Mr. A N. Velayutham, Proctor on the part of the Petitioner abovenamed and the affidavit of the Petitioner dated 13th day of March 1961 having been read:

It is ordered that the Petitioner be and she is hereby declared entitled as widow of the abovenamed deceased to have Letters of Administration to the above estate issued to her accordingly unless the Respondents abovenamed or any other person or persons interested shall on or before the 17th day of May 1961 shew sufficient cause to the satisfaction of the Court to the contrary.

It is further ordered that the 8th Respondent be and he is hereby appointed Guardian-ad-litem over the minors the 1st to 7th Respondents abovenamed to represent them for all purposes of this action unless the Respondents abovenamed or any other person or persons interested shall on or before the 17th day of May, 1961 shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

And it is further ordered that the 8th Respondent do produce the minors the 1st to 7th Respondents in Court on the said date.

This 6th day of April, 1961

Sgd. C. Thanabalasingham,
District Judge.

Extended for 21-6-61.

Sgd. N. Krishnadasan,
District Judge.

## நன்றித்துதி

சதாசகாய இராக்கினியின் இரக்கத்தாலும், அண்டினோர்க்கு ஆறுதல் அருளும் அற்புதவரத்தராம் அர்ச். யூதாததேயுவின் மன்றாட்டாலும் சிறந்தமுறையில் பரீட்சையில் சித்திபெற்றோம். நேர்த்திப்படி பிரசுரஞ்செய்கின்றோம். இவர்கள், நாமம் எங்கும் பிரபல்யமுறுவதாக.

அமலா, ஹேட்றூட், புஷ்பராணி சரோஜா,

அர்ச். செபமாலைநாயகியின் தமிழ்க்கலவன்பாடசாலை, கொம்பனித்தெரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1. | 1-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஒ. | ஒருசந்தி நாள் |

### ஆனிமாதம் — 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ஞா. | பெந்தெக் கோஸ்தின்பின் 2-ம்ஞாயிறு | (வி. ம.) | [ப] |
| 5 | திங. | அர்ச். பொனிப்பாஸியார் | | [ஓ] |
| 6 | செ. | அர்ச். நோர்பேட் | | [வெ] |
| 7 | பு. ம | காலதினம் (ஞாயிறுபூசை) | | [ப] |
| 8 | வி. ம | காலதினம் ( ,, ,, ) | | [ப] |
| 9 | வெ. 1 | யேசுவின் திருஇருதயத்திருநாள் | (வி. ம.) | [வெ] |
| 10 | ச. | அர்ச். மார்கரித்தம்மாள் | | [வெ] |

சத்திய வேத
பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
ஆனிமாதம் 3-ந் திகதி

## உத்தேச கல்விவரி

இற்றைக்குச் சுமார்ஒன்பதுமாதங்களின்முன் —அதாவது சென்றவருடம் ஆவணிமாதம் 26-ம்திகதியன்று சிம்மாசனப் பிரசங்கத்தின்மீது நிகழ்ந்தவிவாதத்திலே முன்னாள் கல்விமந்திரி திரு. டபிள்யூ. தஹநாயக்கா பேசியபோது: உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளை எடுப்பதாலே அரசாங்கத்துக்கு மேலதிகமாக 4கோடியே 30இலட்சம்ரூபா செலவேற்படுமென மதிப்பிட்டுக்கூறினர். ஆனால், இன்றைய கல்விமந்திரியோ அத்தகைய மேலதிகசெலவொன்றும் ஏற்படமாட்டாதென்றும், உதவிப்பணம்பெருது தனித்தியங்கவிருக்கும் பாடசாலைகளால் வருடம்ஒன்றுக்கு அரசாங்கத்துக்கு ஒருகோடிக்கும், இருகோடிக்கு மிடைப்பட்ட தொகையானரூபா மிச்சம்ஏற்படுமென்றும்கூறிச் சமாளித்துக்கொண்டார். இது நிகழ்ந்து இன்னும் ஒன்பதுமாதங்கள்செல்லா முன்னரே இலவசக்கல்வித்திட்டத்தை இலவசமற்ற கல்வித்திட்டமாக்குவதான கல்விவரியென்ற நவீனவரிஒன்றை விதிப்பதுபற்றிய யோசனை எழுந்திருக்கிறது. வருமானவரிசெலுத்துவோர் தங்கள்பிள்ளைகளின் கல்விக்கென்றும் ஒருவிசேஷவரியை இறுக்கும்படிசெய்யக் கல்விமந்திரி உத்தேசிப்பதானது சிலபிரச்சினைகளை எழுப்பிவிட்டிருக்கிறது. இந்தவரியிலிருந்து தப்பிக்கொள்ள நிச்சயமானவழிகள் இரண்டுதான் உண்டு. அவற்றில்ஒன்று, வருமானம் இல்லாதிருப்பது. மற்றென்று, பிள்ளைகள் இல்லாதிருப்பது. அதனால், வருமானமுடையவர்களாய்ப் பிள்ளைகளைக் கொண்டிருப்பவர்களுக்குக்கல்விவரிஎன்பது கசப்பும், கஷ்டமும் உண்டுபண்ணுவதாகும்.

எமதுநாட்டிலே இலவசகல்வித்திட்டம் நடைமுறையில் இருந்துவருவதைப் பலநாடுகளும் பாராட்டும் போதெல்லாம் நாம்பெருமைப்படக் கூடியதாயிருந்தது. ஏனெனில், ஆசியநாடுகள்பலவற்றிலே இலவசகல்வித்திட்டம் கிடையாது. அங்ஙனமாக, இங்கே கல்விவரிஒன்றை நவமாகவிதிக்கும் யோசனையாலே வருமானவரிசெலுத்துவோர் இருபிரிவாகத் தரப்படுத்தப்பட்டு, அவர்கள் குறைந்தவிகிதமாயும், கூடியவிகிதமாயும் கல்விவரி இறுக்கவேண்டிவரும். அதாவது, வருமானவரிசெலுத்துவோர் ஐந்துக்கும் பதினெட்டுக்கும் இடைப்பட்டவயதுள்ளபிள்ளைகளைப் பாடசாலைகளிலே கொண்டிருந்தால் அவர்கள் கல்விவிருத்திக்கெனப் பணம்உதவும்படியாக மேலும்ஒருவரி கட்டவேண்டிய சங்கடநிலைமைஏற்படும். புதிய கல்விவரித் திட்டத்தின்கீழ் குறைந்தவிகித வருமானவரிசெலுத்துவோர் தமதுகுடும்பத்திலுள்ள நான்கு பிள்ளைகளுக்குப் பிள்ளைஒன்றுக்கு வருடம்நூறுரூபாவும், கூடியவிகித வருமானவரி செலுத்துவோர் தமது குடும்பத்திலுள்ள ஆறுபிள்ளைகளுக்குப் பிள்ளைஒன்றுக்கு வருடம் ஐஞ்ஞூறுரூபாவும் கல்விவரியாக இறுக்க வேண்டிவரும்.

வருமானவரிசெலுத்துவோர் தங்கள்வரிமூலம் இலவசகல்வித்திட்டத்திற்கென ஏலவேமுதல் மறைமுகமாகப் பணம்உபகரித்து வருகின்றனர். ஆனால், இந்தஉத்தேச கல்விவரியாலே அதற்கென்று அவர்கள் மேலதிகமாகவும் பணம்கட்டுமாறு கட்டாயப்படுத்தப்படுவார்கள். இது செல்வந்தருக்கு ஒருபொருட்டாயிராது. ஏழைகள் இதனைச்செலுத்த வேண்டி வராது. ஆனால், மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கும் நடுத்தர வகுப்பைச்சேர்ந்த பெற்றோருக்குத்தான் இது பெரும்பாரச்சுமையாயிருக்குமென்று சொல்லவேண்டியதில்லை. தற்போது அரசாங்கம் கல்விச்செலவிற்கென்று முப்பதுகோடி ரூபாவுக்குமேல் செலவிடுகின்றது. இந்தச்செலவுபோதாதென்று உதவிநன்கொடைபெற்று இயங்கிவந்த பாடசாலைகளையும் எடுத்துக் கொண்டதால் மேலும் செலவுக்கு வழிதேடிக்கொண்டது. அவ்வாறாக, இப்போதோ கல்விக்கென்று அரசாங்கம் உதவிவரும்பணமானது வருடந்தோறும்அதிகரித்துவரும் கல்விச்செலவைச்சமாளிக்கப் போதியதாயில்லையாம்.

பெருந்தொகையான கிராமப்பாடசாலைகள் பழுதடைந்திருப்பதாலே அவற்றைத் திருத்தியமைக்க வேண்டுமாம். அதிகமான பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் வேண்டியிருப்பதாலே அதிகமான ஆசிரியபயிற்சிக்கலாசாலைகள் அமைக்கப்படவேண்டுமாம். இன்னும்பல அவசியதேவைகளுமுண்டாம். இவைகளையெல்லாம் சமாளிக்கவே கல்விவரிஒன்றை விதிக்கவேண்டுமென்ற யோசனை உண்டானதாம். கல்விமந்திரியின் இந்தயோசனை வெளிவந்ததும் அரசாங்ககட்சியைச்சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தவர்கள்பலர் அட்டட்டாரேயெனஎழுந்து அதனைவன்மையாக ஆட்சேபித்திருக்கின்றனர். இந்தவரியைத் தாங்கள் எதிர்க்கப் போவதாகத் தெரிவித்திருக்கின்றனர். இவர்களின் எதிர்ப்புகள் ஒருகால் தடுக்கப்பட்டு உத்தேசகல்விவரி நடைமுறைக்கு வருமானல் அது இந்நாட்டிலுள்ள பதினயிரக்கணக்கான பெற்றோருக்குத் தாங்க முடியாத ஒருபாரச்சுமையாகும். இலவசகல்வியென்றுகூறிக்கொண்டு பாடசாலைமாணவர்களுக்குவரிவிதிப்பது ஓர்கேலிக்கூத்தாகவே முடியுமென்க.

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

# ஆத்துமத்தின் அன்பரை அன்புசெய்வோமாக!

நாம் திரித்துவத்தின் மூன்றும் ஆளை எப்படி மதிக்கவேண்டும்? அவரைக் குறிப்பதென்ன? தென்றல் காற்று, புறு, இஸ்ரவேலருக்கு வழிகாட்டிய முகில், விடிவுஒளி, நெருப்புக் கொழுந்து—இவைகள் பிதாவுடையவும், சுதனுடையவும் "கொடை" எவ்வளவு அன்புக்குரியவர் எனக்காட்டுகின்றன.

ஆத்துமத்தின் அர்ச்சிப்பு, மெசியாவின் வரவை ஆவலாய் ஆசிக்கப் பிதாக்களுக்கு ஏவுதல், சங்கீததீர்க்கதரிசிக்குப் பாவன்மை, முற்கண்ணருக்கு ஞானஒளி, மரியாயின் உதரத்தில் யேசுவின் சரீரம் அமைத்தல், தேவதிரவிய அனுமானங்களின் அருள்யாவும்இஸ்பிரீத்துசாந்துவின் கொடைகளே. ஆகவே, இவரில் நாம் அன்புகொள்ளவேண்டியது அவசியம்.

### பக்தி வழிகள்

இந்த அன்பு முதல் அவருடைய பிரசன்னத்தை நினைவுபடுத்தவேண்டும். ஆதாமைப்போல் நாம் தேவனுடன் நடமாடவேண்டும். மங்களங்கேட்டபின் மரியம்மாளைப்போல நாம் இஸ்பிரீத்துசாந்துவை எம்முள்ளத்தில் கொண்டிருக்கிறோம். எம்மில் அவர் வசிப்பதை அடிக்கடி நினைக்கவேண்டும். இந்நினைவால் நாம் பரவசமடையவேண்டாமா? இனியும் நாம் பூலோக, சுயநல, பாவ நாட்டமுள்ளவர்களாயிருக்க முடியுமா? "நீங்கள் கிறிஸ்துவின் உறுப்புகள்"; "உங்கள் உடல் கடவுளின் கோயில்". அன்புசுரக்கவேண்டாமா? விழுந்து தொழவேண்டாமா? அர்ச். சியென்ன கத்தரீனம்மாளைப் போல.

அல்லும் பகலும் கடவுளின் கண்காணிப்பிலிருக்கிறோம். அற்பபாவம், சிறுபிரமாணிக்கவீனம் எமக்கு மலைபோலத் தோன்றும். அவரைஇழப்பதிலும் கொடிய மரணம் இனிது; அவர் இருப்பது பேரின்பம்; இல்லாதொழிவது படுதுன்பம்.

இரண்டாவது, எசமானின் கையைக் காத்திருக்கும் ஊழியனே போல, எமது சித்தமும் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற ஆவல் கொண்டிருக்க வேண்டும். அவருடைய ஏவுதலுக்கு இசைந்து, அமைவது செயலில் உத்தமதனமாகும். ஏனெனில், இஸ்பிரீத்துசாந்துவின் கொடைகள் என்ருல் என்ன? தேவசித்தத்தைத் தீவிரமாயும், பூரணமாயும் நிறைவேற்றச்செய்யும் பழக்கமேயன்றி வேறல்ல. கடவுளே ஆத்துமத்தின் உந்நதவழிகாட்டி. பிறருடைய உதவி தேவையேயாயினும், இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதல்களுக்கு அமைச்சல் இன்றியமையாதது.

எமக்கு இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதல் கிடைக்கிறதா? பாவத்தை விடு; உலகப்போக்கைத்தவிர்; சுயநலத்தைத் திருத்து; பின் உள்ளத்தில் உற்றுக்கேள். மனச்சாட்சி, உள்ளத் தூய்மைபெற்ற மனிதர், பேசுவது அவருடையபேச்சல்லவா? அவருடையஞானவெளிச்சத்துக்குப் பிரமாணிக்கங் காட்டினல், அது வளர்ந்து எம்மைத் தெளிவிக்கும்; ஏவுதல்கிடைக்கும். என்றும் தேவனை நினைந்து தியானித்து, என்றும் அவருக்கு அமைந்து வருவோமேயாகில், பலநாட்களாக ஒன்ருய் வாழ்கின்ற அன்பர் ஒருவர் மற்றவரைப்போலாதல்போல், நாமும்கடவுளைப் போலாவோம்.

## இறுதி விருந்து

( 5-ம் பக்கத் தொடர்ச்சி )

வேண்டுமென ஆசித்தார். மனிதர் தம்முடைய இரட்சணியப் பலிபற்றி வாசிப்போராக இருக்காது அவர்கள் அதில் பங்குபெறுவோராக இருக்கவே அவர்விரும்பினர். இது எனது சரீரம், இது எனது இரத்தம் என்று மனிதரும் தம்முடன் சேர்ந்து இப்பலியை ஒப்புக்கொடுத்துத் தம்முடன் இணைந்து தெய்வீக பந்தனமாக வேண்டுவது அன்னரின் விருப்பு.

## லாவோசில் 20விசாரணைப்பங்குகள் கொம்யூனிஸ்தர் வசமுள்ளன

லாவோசில் யுத்தத்தைநிறுத்தும்படி பிரித்தானியாவும், சோவியத்யூனியனும் கேட்டுக்கொண்டசமயம் லாவோசில் கொம்யூனிஸ்தரால் கைப்பற்றப்பட்டபகுதிகளில் லாவோசின் 50விசாரணைப்பங்குகளில் 20 கொம்யூனிஸ்தர் வசமிருந்தன. இந்த 50விசாரணைப் பங்குகளில் 122 வேதபோதகநிலையங்கள் இணைக்கப்பட்டு இருந்தன. பாதெற் லாவோஸ் கொம்யூனிஸ்தபடைகளிடம்சிக்கிய 16விசாரணைப்பங்குகளும் வியன்ரியான் அப்போஸ்தொலிக்க பதிலதிகாரியினுடைய பகுதிகளாம். இவை வடக்கு மேற்கு லாவோசையும் உள்ளடக்கியுள்ளன. நான்கு விசாரணைப்பங்குகள் தக்கேக் அப்போஸ்தொலிக்க அதிகாரியின்கீழ் உள்ளவை, சியேங்கோஆங்பகுதிகள் கொம்யூனிஸ்தபடைகளினல் கைப்பற்றப்பட்டபோது பிரான்ஸ்தேச மிஷனரியான [illegible] O.M.I. சுவாமியார் கைதுசெய்யப்பட்டதாக அறியப்படுகிறது. பிரான்சு அரசாங்கம் அவரை விடுதலைசெய்யும்படி கேட்டுள்ளது.

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

* * *

### ஆனிமாதம்

**பொதுக்கருத்து —** இன்றைய மக்களுக்கு ஏற்ற வழிவகைகளாலும், திருச்சபையின் விருப்பத்திற்கு ஏற்ற முறையிலும் யேசுவின் திருஇருதயப் பக்தி பரவும்படியாக வேண்டிக் கொள்வது.

**வேதபோதக கருத்து —** வேதபோதக நாடுகளிலுள்ள மிஷன்பாடசாலைகளில் பணியாற்றும் கத்தோலிக்கஆசிரியர்கள் "கத்தோலிக்கன்" என்றபெயருக்கு அருகதையுள்ள உண்மைக் கத்தோலிக்கரை உருவாக்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி விருந்து

— சா. பே —

வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகள் என்றுமே நினைவுறுத்தற்குரியன. வாழ்க்கையினிறுதியும் சில தருணங்களில் என்றுமே மறத்தற்கரியது. நாட்டின் நலனுக்காகத் தமதுயிரைஅர்ப்பணித்த படைவீரருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியை எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? உள்ளத்தைஅள்ளும் உணர்ச்சிமிக்க நிகழ்ச்சி அது.

இராணுவ வீரர்கள் இறப்பதற்கென்றே பிறந்தவர்களல்லர். வயிற்றுப் பிழைப்புக்காகவே அவர்கள் படையணியில் சேருகின்றனர். கடுமையான இராணுவப் பயிற்சிகளும், உணர்ச்சி தரும் வாத்திய இசைகளும், தலைவனின் பயங்கரமிகுந்த கட்டளைகளும், நாட்டுப்பற்றும் அவர்களை வீரர்களாக மாற்றிவிடுகின்றன.

ஆயின் கிறிஸ்து இறப்பதற்கெனவே பிறந்தார். அவர் உதித்தபோது தேவஅன்னைக்கு அவரின் மரணம் நினைவுறுத்தப்பட்டது. இறப்பதற்கெனவே பிறந்த கிறிஸ்து தமது மரண ஞாபகார்த்தமொன்றை இவ்வுலகில் நிறுவ எண்ணினர். இறைவனும் மனிதனுமான அன்னர் தம் மரணம்பற்றிக் கூறுந் தருணங்களிலெல்லாம் பின்னர் உயிர்த்தெழுதல்பற்றியும் குறிப்பிட்டுள்ளார்; எனவே, தாம் மரித்துயிர்த்த பின்னர் மனிதர் தமக்கோர் நினைவுச்சின்னம் அமைப்பதைக் காட்டிலும் தம்மை அவர்கள் மறவாதிருக்கத் தாமே ஒன்றை நிறுவ உன்னியது போற்றற்குரியதே.

பெரிய வியாழனன்றிரவு தம் சீடர்கட்களித்த இறுதி விருந்தின்போது இதையே செய்தார். தங்கள் மரணத்தை எதிர்நோக்கிப் படைக்களம் செல்லும் இராணுவவீரர்கள் தமக்கோர் ஞாபகச்சின்னம் நிறுவ எண்ணுவதில்லை. அரசாங்கமோ அல்லது சில நிறுவனங்களோ நாட்டின் நலனுக்காக உயிர்தந்த அத்தியாகிகளின் நினைவாக நடுகல் நாட்டுகின்றன. வருடாந்தம் அவர்களின் புகழ் பாடுகின்றன. கிறிஸ்து தமது நினைவுச்சின்னத்தைத் தாமே அமைத்தார். இராணுவ வீரனைப்போல வீரமரணம்எய்தி மண்ணில் புதைக்கப்படுவதுடன் அவர் வாழ்வு முடிவடையவில்லை. இறப்பின்பின்னரும் உத்தானமெய்தி மனிதர்மத்தியில் வாழ விரும்பியதால் இச் சின்னத்தை அவர் அமைத்தார்.

மோசேஸ் முனிவர் மூலம் யூதமக்களுக்குப் பழைய வேத நியமங்களை வகுத்த தேவன் தமது ஏக திருக்குமாரன் மூலம் புதிய வேதத்தை உலகுக்களித்தார். பழைய வேதமுறையில் குருக்கள் விலங்குகளின் இரத்தத்தைச் சிந்தி இறைவனுக்குப் பலியைச் செலுத்தினர். புதிய வேதமுறையில் கிறிஸ்து தமது இரத்தத்தையே தேவனுக்குக் காணிக்கையாக்கினர்.

பெரியவியாழனன்று மாலை தமது பன்னிரு சீடர்களையும் அவர் அழைத்தார். தமது நடவடிக்கைகளின்மூலம் தம்மரணத்தை அவர்கட்கு நினைவுறுத்தினர். தம் பாடுகளும் அதைத் தொடர்ந்துவரும் மரணமும் புதிய வேதத்தின் தொடக்கமென்பதை எடுத்துக்காட்டினர். தம்மைப் பரித்தியாகம் செய்வதன்மூலம் பலி செலுத்துவதில் ஒரு புதிய வழியையும் அகில உலகுக்கும் தெரியப்படுத்தினர். மனித சக்தியால் உண்டாக்கப்படும் தீபலியான விலங்கின் மாமிசத்தைப் பஸ்மீகரம்செய்து பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கும் வழக்கம் அங்கு காணப்படவில்லை. கிறிஸ்துவின் உத்தானத்தின் மகிமையே அக்கினியாகவும், அதிலெழும் சுவாலைகள் இஸ்பிரித்துவின் கொடைகளாகவுமிருந்தன.

கிறிஸ்துவின்மரணம் அவர் மீண்டும் உத்தானமடைவாரென்பதற்கு அறிகுறி. தமது சீடருக்கும், அவர்களைப் பின்தொடர்பவர்கட்கும் தமது இரட்சிப்பின் ஞாபகத்தை அவர் நிறுவ எண்ணினர். இதையே முன்னொரு தடவை 'நாமே சீவியத்தின் அப்பம்' என அவர் குறிப்பிட்டார். அப்பத்தைத் தமது கரங்களில் எடுத்து ஆசீர்வதிக்கிறார். அதைப் பங்கிட்டு அப்போஸ்தலர்கட்களிக்கின்றார். 'உங்களுக்காக அளிக்கப்படும் நமது சரீரம் இது' எனக் கூறுகிறார். இந்த அப்பம் எனது சின்னம் அல்லது எனக்குப் பதிலானது என்று அவர் கூறவில்லை. இதை நாம் கவனித்தல் அவசியம். எனது சரீரம் எனக் கூறுகிறார். ஆம், திருப்பாடுகளின்போது நொறுங்குண்ட அத்திவ்விய சடலத்தையே குறிப்பிடுகிறார்.

பின்னர் இரசமடங்கிய கலசத்தைத் தமது கரங்களிலெடுக்கிறார். 'இதிலிருந்து எல்லோரும் பானம்பண்ணுங்கள்; ஏனெனில், புதியதும் நித்தியமானதுமான எனது இரத்தம் இது; உங்களினதும், மற்றும் அநேகரினதும் பாவமன்னிப்புக்காகச் சிந்தப்படும் எனது இரத்தம்' என்றார். இவ்விதமே அடுத்துவரும் தமது மரணத்தின் தன்மையை அவர்கட்கு விளக்கினர். அவர் அப்பத்தையும் இரசத்தையும் தனித்தனியே வசீகரம் பண்ணினர். ஏககாலத்தில் இரண்டையும் வசீகரம் செய்யாததன் காரணம் சில மணிநேரம் தாம் சிலுவையில் தொங்கும்போது தம் குருதியனைத்தும் சடலத்தினின்றும் பிரிந்தோட அதன்பின்னரே மரிப்பார் என்பதை எடுத்துக் காட்டவேயாகும்.

இவ்விதம் திவ்விய நற்கருணையை உண்டாக்கும்போது அடுத்தநாள் தாம் நடாத்தவிருக்கும் ஒருமுக்கியநிகழ்ச்சியையும் சித்திரிக்கிறார் கிறிஸ்து. சிலுவையில் தாமே பலிப்பொருளாகவும், குருவாகவும் ஏககாலத்தில் கடமையாற்றப்போவதே அது. பழைய வேத வழிபாடுகளிலும், புறமதத்தவரின் வணக்கங்களிலும் பலிப்பொருளான செம்மறியாடோ அல்லது வெள்ளாடோ பலியை ஒப்புக்கொடுக்கும் குருவிடமிருந்து புறம்பானது. இருதரப்பினருக்குமிடையில் எவ்வித தொடர்புமில்லை. ஆயின் தேவநற்கருணையை வசீகரித்த இறுதிவிருந்திலும், சிலுவையில்நடாத்தியபலியிலும் கிறிஸ்துவே பலியை ஒப்புக்கொடுக்கும் குருவாக நின்று தம்மையே பலிப்பொருளாக ஏக பிதாவுக்குப் பலி செலுத்தினர். இவ்விதமே பலிப்பொருளும், குருவும் ஒன்ருக மாறியது.

பின்னர் எங்களாண்டவர் ஓர் உத்தரவின்மூலம் தமது நினைவுச்சின்னம் என்றென்றும் இவ்வுலகில் நினைவுறுத்தப்படும்வழியை மேற்கொள்கிறார். இதை எனது ஞாபகமாகச் செய்யுங்கள்என உரைக்கிறார். ஆம், மீண்டும் மீண்டும் செய்யுங்கள். ஒவ்வொருநாளும் புதுப்பியுங்கள்என்பது அவர்கருத்து. கிறிஸ்து இறந்து பலநூற்றுண்டுகளாகின்றன. இன்றுமே தினசரி திரளான குருப்பிரசாதிகளால் உலகமடங்கிலும் கட்டிக் கொள்ளப்படும் பாவாக்கிரமங்களுக்குப் பரிகாரமாக இந்தப்பலி — திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகின்றது.

கிறிஸ்து அப்பத்தையும், இரசத்தையும்மட்டும் தமது ஞாபகச்சின்னத்தின் மூலப் பொருட்களாக ஏன் தெரிந்து கொண்டார்?

1. வேறு உணவுப்பொருட்களிலும் பார்க்க அப்பமும், இரசமும் ஒற்றுமையின் அதிமுக்கிய சின்னங்களாக விளங்குகின்றன. பல கோதுமைமணிகளின் சேர்க்கையே அப்பமாக மாறுகிறது. பல திராட்சைப் பழங்களின் சாறு ஒன்றுசேர்ந்து இரசமாகின்றது. கிறிஸ்துவை விசுவசிப்போர் அனைவரும் அவரில் அடங்குகின்றனர். அவர்கள் வேறு; அவர் வேறு என்பதல்ல. கிறிஸ்துவும் அவரை விசுவசிப்போரும் ஏக ஐக்கியமாகின்றனர் என்பதைக் குறிப்பதில் அப்பத்துக்கும் இரசத்துக்கும் இணையானதொன்றுண்டோ?

2. தங்கள் நிலையையடைவதற்கு முன்னர் அப்பமும் இரசமும் பல்வேறு உபத்திரவங்களை அனுபவிக்க வேண்டியிருக்கின்றன. கோதுமை மணிகள் வயலில் அறுக்கப்பட்டு, அடிக்கப்பட்டு, உமி வேருக்கப்பட்டு, கல்வாரியெனும் மாவாலையில் அரைக்கப்பட்டு அபரிமிதமான நெருப்பில் வெந்துபல இன்னல்களின்பின்னர் அப்பமாகிறது. திராட்சைப்பழங்களும் ஜெத்சமனியில் எங்களாண்டவர் அனுபவித்த வேதனைகட்கிணையாகக் கசக்கிப்பிழியப்பட்டு திராட்சை இரசமாகின்றன. இவ்விதமே கல்வாரியிலும், ஜெத்சமனியிலும் கிறிஸ்துநாதர் எமக்காகப் பட்ட பாடுகளை, அனுபவித்த வேதனைகளை நினைவுறுத்தும் அப்பமும், இரசமும் இரட்சணியத்தின் வழியிதுவென எடுத்துக்காட்டும் தன்மையனவன்றோ. நாமும் பாவாக்கிரம வாழ்வினின்று மரித்து, உலகமெனும் மாயையின் சோதனைகளில் ஜெயித்து வேறுரு எடுத்தால்மட்டுமே கிறிஸ்துவுடன் ஐக்கியமாகலாம் என்பதை இப்பொருள்கள் எமக்கெடுத்துக்காட்டிக் கொண்டேயிருக்கின்றன.

3. மனிதனின் மிகமுக்கியஉணவாக அப்பமும் இரசமும் விளங்குகின்றன. கிறிஸ்துநாதர் வசித்த பலஸ்தீனவிலும் அதைச்சுற்றிலும் அப்பமும் இரசமுமே மிக முக்கியமான உணவுப்பொருட்களாக விளங்கின. இவைகளைப் பீடத்துக்குக் கொணர்வது மனிதனையே கொண்டுவருவதற்குச் சமானமாகும். அப்பமும் இரசமும் மனிதனுடைய சரீரமாகவும் இரத்தமாகவும் மாறிப்போகின்றன. கிறிஸ்து அப்பத்தையும் இரசத்தையும் தமது சரீரமாகவும் இரத்தமாகவும் மாற்றினர். எனவே, கிறிஸ்துவின் சரீரமாகவும் இரத்தமாகவும் மாறிய இந்தஅப்பமும் இரசமும் எம்முள் வரும்போது நாம் கிறிஸ்துநாதருடன் ஐக்கியமாகி அவருக்குச் சொந்தமானவர்களாக மாற்றப்படுகிறோம்.

சிலர் கருதுவதுபோல, கிறிஸ்துவின் சீடர்களால் இந்த ஞாபகச்சின்னம் — திவ்விய நற்கருணைச்சடங்கு ஏற்படுத்தப்படவில்லை. மரணமானது தம்மை ஆட்கொள்ள முடியாதெனக் கூறிய கிறிஸ்துவே இதை உண்டாக்கினர். சிலுவையில் தம்மைப் பலியாக்கியதால் உலக இரட்சணியத்தை உருவாக்கிய தேவன், அந்த இரட்சணியம் உலகம் முழுவதும் பரவும்வரை—சிலுவையை அகிலமும் மனமாற்றத்துடன் நோக்கும்காலம்வரை தமது பலியின் பெறுபேறுகள் இப்பலியினுல் கிடைக்க வேண்டும் எனக் கருதினர்.

அவர் அப்பத்தை எடுத்துத் துண்டுகளாக்கினர். அவருடைய சரீரமும் பாடுகளின்போது துண்டுதுண்டாக நொறுக்கப்படும் என்பதை இதனுல் எடுத்துக்காட்டுகிறார். தமது முழு விருப்பத்துடனும் பலிப்பொருளாக மாறுகிறார் என்பதையும் குறிப்பிடுகிறார். மனப்பூர்வமாகத் தம்மைச் சேவகர்களிடம் கையளிக்கப்போவதையும் அக்கொலைகார வெறியர்கள் தங்கள் மனவிருப்புக்கிசைய அவரைக் கொடுமைப்படுத்த விருப்பதையும் இதனுல் சித்திரிக்கிறார்.

இறுதிவிருந்தின்போது கிறிஸ்துநாதர் முதல்தடவையாக இப்பலியின் தன்மைகளை, அப்பத்தினதும் இரசத்தினதும் குணங்கள்மூலம் அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தினர். அவரது உத்தானத்தின் பின்னுல் இதே பலியை அவரின் பிரதிநிதிகளாக அப்போஸ்தலரும், அவர்களைத் தொடர்வோரும் பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுப்பர். எப்போதாவது இப்பலி எங்காவது ஒப்புக்கொடுக்கப்படும்போதெல்லாம் கிறிஸ்துநாதர் இறுதி விருந்தின்போதும், சிலுவையிலும் ஒப்புக்கொடுத்த அதேபலியே புதுப்பிக்கப்பட்டு ஞாபகப் படுத்தப்படுகின்றது.

அப்பத்தைத் தமது சரீரமாகவும், இரசத்தைத் தமது இரத்தமாகவும் மாற்றியபிறகு அதை அப்போஸ்தலர்கட்குக் கொடுத்தார். இவ்விதம் அவர்களும் அவருடன் நன்மையை உட்கொண்டதனுல் கிறிஸ்துவுடன் இணைந்து கிறிஸ்துவைக் கிறிஸ்துவால் பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுப்போர் ஆனுர்கள்.

அன்பு ஒருமித்தலையே நாடுகிறது. மனிதவர்க்கத்தின் மிகப்பெரிய அன்பு கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலுள்ள மாமிச பந்தனமே. இதுபோலவே தெய்வீக வர்க்கத்தின் மிகப்பெரிய அன்பும் கிறிஸ்துவையும் மனிதனையும் திவ்வியநன்மையால் இணைத்தல் ஆகும். பின்னுல் அப்போஸ்தலரும் திருச்சபையினரும் தங்கள் தெய்வீகமேய்ப்பரின் ஆணைப்படி இத்திருப்பலியை ஒப்புக்கொடுத்துத் திருவிருந் தருந்திய போதெல்லாம் அவர்கள் மனிதவுருவெடுத்த கிறிஸ்துவின் சடலத்தையல்ல, தெய்வீகப் பிரதாபத்துடன் பரமண்டலங்களில் வீற்றிருக்கும் கிறிஸ்துவின் திருச்சடலத்தையும் இரத்தத்தையுமே உட்கொண்டனர். இவ்விதமே சிலுவையின் இரட்சணியம் இப்பலியினுல் புதுப்பிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றது.

எங்களாண்டவர் தேவவசீகரத்தின் பின்னர் அதை அருந்தும்படி அப்போஸ்தலர்கட்குக் கட்டளையிட்டார். எவ்விதம் அப்பமும் இரசமும் மனித உடலைப் போஷிக்கின்றனவோ அவ்விதமே ஆன்மபோசனமாகத் தமது திருவுடலும் திருவிரத்தமும் விளங்க வேண்டுமென்பது அவரது அவா. மற்றைய மதங்கட்கும் கத்தோலிக்கத்துக்கும் ஒரு மாறுபாடு இருப்பது இங்கு காணப்படுகின்றது. மற்றைய மதங்களைப் போலவே மதக் கோட்பாடுகள் எழுத்தில் எழுதப்பட்ட பல உண்மைகள் கத்தோலிக்கத்திலும் உண்டு. ஆயின், கிறிஸ்துவின் வாழ்க்கையிலும்பார்க்கச் சிறந்தகோட்பாடு இல்லை. கிறிஸ்து தம்மையேஅளித்த இந்தத் தெய்வீக இரகசியத்திலும் பார்க்க மிகப்பெரிய உண்மை கத்தோலிக்க தத்துவங்களிலும் இல்லை.

கிறிஸ்து தாமே தமக்கு ஒரு சின்னத்தை நிறுவாதுவிட்டிருப்பின் என்ன நடந்திருக்கும்? கிறிஸ்துவின் இரட்சணிய அலுவலை ஒரு சரித்திரமாக மனிதர்கள் கருதியிருப்பர். தாம் நினைத்தவிதங்களிலெல்லாம் ஞாபகச் சின்னங்களை நிறுவமுற்பட்டிருப்பர். லிங்கனின், மகாத்மா காந்தியின் கொலையைப்போல இதையும் கருதி அன்னரின் வருடாந்த தினத்தில்மட்டும் நினைப்பதுபோல, கிறிஸ்துவையும் நினைப்பர். அர்ச்சியசிஷ்டர்களின் தினங்களில் அவர்களை நாம் வழிபடுவதுபோல, கிறிஸ்துவும் கருதப்பட்டிருப்பார். மனிதர் ஆண்டவரை ஒரு தியாகி என்று கருதுவதுடன் நிறுத்தியிருப்பர். சுவிசேஷகர்களின் வசனங்களை மக்கள் வாசிக்கும்போது பழையகாலச் சம்பவங்களைக் காலப்போக்காக வாசிப்பவர்களின் கருத்துகளே உண்டாகும்.

கிறிஸ்துநாதர் தமது இரட்சணிய அலுவல்களையிட்டு நூல்களையெழுதிப் பரப்பும்படி எவருக்காவது கட்டளையிடவில்லை. ஆயின், தமது பலியைப் புதுப்பிக்கும்படி மட்டுமே கூறினர். கல்வாரியில் தாம்நடாத்தியகாட்சிகள் தினசரி பலிபீடங்களில் இடம்பெற

(தொடர்ச்சி 4-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## ஜீவ ஜலம்

**அன்புமிக்க இளைஞர்களே !**

யூதசனமானது, தாங்கள் வனாந்தரத்தில் அலைந்துதிரிந்த 40வருஷகாலத்தை ஞாபகப்படுத்தி வருஷாவருஷம் கொண்டாடிவருவார்கள். கொண்டாட்ட நாட்களில் அவர்கள் சிறுகூடாரங்களில் வசிப்பார்கள். ஒவ்வோர்நாட் காலையிலும், குருக்கள் சீலோஎன்னும் தடாகத்திற்குப் பவனியாகச்சென்று அங்கிருந்து மொண்டுவந்த தண்ணீரைத் தேவபலிபீடத்தில் ஊற்றுவார்கள். இவையாவும் தேவபிரஜைகளாகிய அவர்கள் வனாந்தரத்தில் தங்கிய நாட்களையும், அவர்களுக்குத் தேவன்காட்டியருளிய சலுகையையும், மேலான அற்புதங்களையும், கொடுத்த கற்பனைகளையும், அற்புதமன்னாவையும், அற்புத ஜலஊற்றையும் ஞாபகப்படுத்தின.

ஓரேப்மலையிலிருந்து மோயீசன் அற்புதமாய் நீர்பாயப்பண்ணியதின் ஞாபகமாகவே சீலோயி தடாகத்தண்ணீர் மொண்டுகொண்டு வரப்பட்டுப் பலிபீடம் அத்தால் கழுவப்பட்டது. மலையினின்றுபாய்ந்த அற்புததண்ணீர், சனங்களின்மத்தியில் இருந்துவந்த தேவபிரசன்னத்தின் அடையாளமாயிருந்தது. அவர் என்றும் சனங்கள்மேல் பொழிந்துவரும் நன்மைகளையும், வரங்களையும் குறித்துக் காட்டிக்கொண்டிருந்தது.

யேசுநாதர் அக்கொண்டாட்டங்களின் கடைசிநாளில், தேவாலயத்தின் வாசற்படியில் நின்றுகொண்டு, குருக்கள் சீலோயின் தண்ணீரை மொண்டுவருவதை அவதானித்து, உரத்தசத்தமாய்ச் சொன்னதாவது: "எவனாவது தாகமாயிருப்பானாகில், என்னிடத்தில்வந்து பானம்பண்ணுவானாக. வேதவாக்கியம் சொல்லுகிறபடியே என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுடைய வயிற்றினின்று ஜீவஜலநதிகள் பாய்ந்தோடும் என்றார்."

தமது திருஇருதயத்தின் வற்றாத வரப்பிரசாத ஊற்றைப்பற்றியே மேற்படி வார்த்தைகளைச் சொல்லலாயினார். பாவமனுஷன் தனது பாவத்தன்மையை உணர்ந்து, இரட்சணிய மடைவதற்குத் தாகம்கொண்டு தம்மிடம் அணுகவேண்டும்என்றதே கருத்து. திருஇருதயநாதர் தேவஅருளால் தம்மையண்டும் யாவரையும் நிரப்புவார். தனித்தனியே ஒவ்வொருவரும் அவரண்டைசென்று ஜீவஜலமாகிய அருளைப் பெற்றுக்கொள்ளல்வேண்டும். விசுவாசத்தினாலேயே அவரை அண்டுகிறோம். இரத்தமும், தசையும், நரம்பும் கொண்டதாகிய அவரது திருமனுஷீக இருதயத்தையும், சரீரத்தையும் தேவநற்கருணையில் பெற்றுக்கொள்ளுகிறோம். "ஜீவியத்தின் ஜலத்தை"த்தரும் யேசுவின் திருஇருதயத்துக்கு நாம்காட்டும் பத்திமுயற்சியே திருஇருதயப் பத்தியாம்.

ஆனிமாதமாகிய இம்மாதத்தில் இத்திருஇருதயத்திற்கு மனுஷர்காட்டும் நேசமுயற்சிகளுடன், உங்களுடைய நேசமுயற்சிகளையும் சேருங்கள். பரித்தியாகக்குணத்துடன் நீங்கள்எடுக்கும் பிரயாசைகள் திருஇருதயத்தின் அன்பில் உங்களை நிலைநாட்டும்.

ஞானப்பிதா

—✻—

## மகனே! யேசுவின் திருஇருதயத்தில் நம்பிக்கைவை.

அன்றைய ஆடம்பரங்கள் அன்று திருஇருதயத் திருநாள் என்பதை நன்கு புலப்படுத்தின. மணிகள் மக்களை வாரீர்! வாரீர்!! என்றழைத்தன. யோண் நேர்முகப்பரீட்சைக்காக வீட்டைவிட்டுப்புறப்பட்டான். கோவிலின் முன்வந்ததும் கோபுரத்தை நோக்கினான். பரீட்சைக்கு நேரம் இருந்தது. கோவிலுக்குள் சென்று பலிபூசையில் பங்குபற்றினான். பூசையின்பின் திருஇருதயத்தின்மேல்வைக்கவேண்டியபக்திவணக்கத்தை எடுத்துக்கூறினார் குரவர்.

இவைஎல்லாவற்றின்பின் நேரம் பிந்திவிட்டது என்றுகண்டு தீவிரமாய்க் கோவிலைவிட்டு வெளியேறிப் பரீட்சைமண்டபத்தின் வெளிவாயிலையடைந்ததும், அங்கு நின்ற ஒரு துரைமகன் அவன் பிந்திவந்ததைக்கண்டு,அவனைமுறுமுறுத்தான். உள்மண்டபக் கதவுதிறபடவே, பரீட்சை முதலாளி யோணைப்பார்த்து, "நீ பிந்திவிட்டாய் காரணமேதுமுண்டோ?" என்று கேட்டார். அவன் மறுமொழியாக, "நான்வந்தபோது நேரம் இருந்ததால் கோவிலுக்குப்போனேன், பிந்திவிட்டேன்" என்று தாழ்ந்த குரலில் பதிலிறுத்தான். இதுகேட்ட முதலாளி, "ஓ சரி, சரி, நாம் கத்தோலிக்கருக்கு வேலை கொடுப்பதில்லை நீ போகலாம்" என்றான். அப்போது யோண் அமைதியாக, "வேலைக்கும் வேதத்திற்கும் என்னதொடர்பு, வேலையை நன்றாய்ச் செய்தாற்போதாதா?" என்று கேட்டுவிட்டுத் திரும்பும்போது முதலாளி, "எனக்கு ஒரு ஆள் தேவைப்படும்" என்று அவனது விலாசத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டான்.

வீட்டுக்குவந்த மகனைக் கண்ட தாயார் அவன் நிலையை அறிந்துகொண்டாள். அவனை நோக்கி, "இன்றுதானே நவநாளை முடித்தோம். நாம் திருஇருதயத்தில் முழு நம்பிக்கை வைக்கவேண்டும். அவர் செய்வது எதுவோ, அதுவே போதும்" என்று புத்திபுகட்டினாள். அடுத்தநாள்பின்னேரம் துரைமகன் ஒருவன் வந்து யோணின் குடும்பத்தைப் பார்க்கவிரும்பினார். அவர் யோணைப் பார்த்து, "உன் வேதவிசுவாசத்தையும், அடக்க ஒடுக்கத்தையும் கண்டபோது இப்படிப்பட்ட ஒருவர் தன் கடமையிலும் பிரமாணிக்கமாய் இருப்பான்என்று நினைத்தே உன்னை எனது வங்கியின் காரியதரிசியாக நியமிக்கும் நோக்கமாகவே வந்தேன்" என்றார். யோணும் வேலையை ஒப்புக்கொண்டான்.

மூன்று வருடங்கள் கழிந்தன. மீண்டும் திருஇருதயத் திருநாளன்று காலை 10 மணியளவில் யோண்வீட்டிற்குவந்து தன் தாயையும்,தங்கையையும் ஒரு விருந்துக்கு வரும்படி அழைத்தான். மூவரும் வண்டியிலேறிப் புறப்பட்டனர். வண்டியும் பட்டணத்தில்இருந்து சில மைல்களுக்கப்பாலுள்ள ஒரு புதுக் கட்டடத்தையடைந்தது. 'அவ்வீட்டில் ஒருசிறு அறையில் திருஇருதயச் சுருபத்தின்முன் ஒரு வெளிச்சம் எரிந்துகொண்டிருந்தது அதன் கையில் ஓர் அட்டை கட்டியிருந்தது. அதிலே, "தம் நம்பிக்கை எல்லாம் என்மீது வைக்கத் தன் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்த ரோசம்மாவுக்கு நன்கொடை" என்று எழுதியிருந்தது. மகன் தாயை நோக்கி, "என் சம்பளம் முறையாக அதிகரித்தது. அதை நான் உங்களுக்கு அறிவிக்காமல் காசைச் சேகரித்து உங்களுக்காக இவ்வீட்டைக் கட்டினேன்" என்றான்.

அன்று, மதிய போசனத்துக்குப் பங்குக்குரவரும், துரைமகனும் சமுகமளித்தனர். பின்பு, மீண்டும் எல்லோரும் சுரூபத்தைச் சந்திக்கச் சென்றனர். சுரூபத்தின் மறுகையில் மீண்டும் ஒரு அட்டை கட்டியிருந்தது. அதிலே, "யோண் வங்கியின் பங்காளியாகவும், மனேஜராகவும் நியமிக்கப்பட்டதைத் திருஇருதயம் அறிவிக்க விரும்புகிறது" என்றிருந்தது. அப்போது, தாயானவள் மகன் தலைமேல் கையை வைத்து அழுது, "தம்மிடத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறவர்களின் இரட்சணியமாகிய யேசுவின் திவ்விய இருதயமே!" என்று மெதுவாக ஓதினாள். பின்பு, அவர்கள் அவ்வீட்டிலே வசித்து வந்தனர்.

# சுவிசேஷ வியாக்கியானக் குறிப்புகள்

— B. W. J. —

### 22. ஸ்நாபகரின் கடைசிச் சாட்சி
### (அரு. III. 22-36)

(1) **யூதேய தேசத்துக்கு** (22) — அதாவது யூதேயாவின் தலைநகராகிய ஜெருசலேமை விட்டு அதற்கு வெளியே இருக்கும் நாட்டுக்குப் போனார்கள். அங்கே யேசுநாதரல்ல, அவருடைய சீஷர்களே ஞானஸ்நானம் கொடுத்தார்கள் (அரு. iv. 2).

(2) **என்னோன்** (23) — ஸ்நாபகர் பொதுவாகச் சாக்கடலுக்குக்கிட்ட இருக்கும் யோர்தான் கரையிலேதான் ஞானஸ்நானம் கொடுத்தார். மழை பெய்து வெள்ளமிருக்கும் காலத்தில் வேறு இரு இடங்களுக்கும் போனார். 1-வது யோர்தான் அருகிலிருக்கும் பெத்தானியா (அரு. i. 28). 2-வது சாலிம் ஊருக்கடுத்த என்னோன். என்னோன் என்பதற்கு அர்த்தம் தரையிலிருக்கும் கண்கள் அல்லது ஊற்றுகள். சாலிம் சித்தோப்பொலிஸ் என்னும் நகருக்குத் தெற்காலே 8 மைல் தூரத்தில் இருந்த ஒரு ஊர்.

(3) **யூதர்களுக்கும்** (25) — இந்தச் சுவிசேஷத்தின் பழைய கிரேக்க தோற்பத்திரங்களில் "யூதர்களுக்கும்" என்றல்ல, "ஒரு யூதனுக்கும்" என்றே எழுதப்பட்டிருக்கிறது.

(4) **சுத்திகரிப்பைக் குறித்துத் தர்க்கம்** (25) — அதாவது, யேசுநாதரின் சீஷர்கள் கொடுக்கும் ஞானஸ்நானம்தான் கூடிய பயன் உள்ளது என்று ஒரு யூதன் சொல்ல, ஸ்நாபகரின் சீஷர்கள் அதை மறுத்ததினால் வந்த தர்க்கம். ஸ்நாபகர் தம்முடைய சீஷர்களைப்போல எரிச்சல் கொள்ளாமல் யேசுநாதரைப்பற்றி ஐந்தாம் சாட்சி சொன்னார்.

(5) **மணவாட்டி** (29) — பழைய ஏற்பாட்டிலே இஸ்ராயேலை ஆண்டவரின் மணவாட்டி என்றும், (இஸ். l. 1; எரே. ii. 2; எசே. xvi. 8; ஓசி. ii. 16), ஆண்டவராகிய மெசியாவை மணவாளன் என்றும் (சங். xliv. 10-12) அழைத்தார்கள். புதிய ஏற்பாட்டின் வேறு இடங்களிலும் இந்த ஒப்பனை பாவிக்கப்படுகிறது (மத். ix. 15; மாற். ii. 19; லூ. v. 35; எபே. v. 25). ஆகையால், ஸ்நாபகர் யேசுநாதரை மணவாளன் என்றும், அவருடைய சீஷர்களின் சபையை மணவாட்டி என்றும் கூப்பிடுவது ஒரு அதிசயமல்ல.

(6) **குறுகவும் வேண்டும்** (30)—இத்துடன் ஸ்நாபகருடைய சாட்சி முடிந்தது என்றும், பின்வரும்வார்த்தைகள் சுவிசேஷகராகிய அருளப்பருடைய குறிப்புகள் என்றும் சிலர் எண்ணுகிறார்கள். ஆனால், அப்படி எண்ணுவதற்குப் போதிய நியாயமில்லை.

(7) **மேலானவர்** (31) — உலகத்திலிருக்கிறவராகிய ஸ்நாபகருக்கு உலக அறிவுதான் இருக்கும். ஆனால், பரலோகத்திலிருந்து வந்தவராகிய யேசுநாதருக்குத் தேவ அறிவு உண்டு. ஆகையால், யேசுநாதர் மேலானவர்.

(8) **ஏற்றுக்கொண்டவன்** (33) — சுதனை விசுவசிப்பதற்கு இரு மூகாந்தரங்கள் உண்டு. 1-வது அப்படி விசுவசிக்கிறவன் சுதனை அனுப்பினவரைச் சத்தியமுள்ளவர் என்று சங்கிக்கிறான். 2-வது அப்படி விசுவசியாதவன் சீவியத்தைக் காணமலும், தேவகோபத்திற்கு உள்ளாயும் இருப்பான் (36-ம் வசனம்). சீவியத்தைக் காணாதது என்பதற்கு அர்த்தம் நரகத்தில் சருவேசுரனுடைய காட்சியை இழப்பதினால் வருகிற இழவின் வேதனை. தேவ கோபத்திற்கு உள்ளாவது என்பதற்கு அர்த்தம் நரகத்தில் நெருப்பு முதலிய ஆக்கினைகளினால் வருகிற ஐம்புலன்களின் வேதனை.

(9) **இஸ்பிரீத்துவை அளவோடு கொடுக்கிறதில்லை** (34) — அதாவது சருவேசுரன் எனக்குத் தமது இஸ்பிரீத்துவை ஏராளமாகத் தந்தபடியால், தமது குமாரனுக்கு என்னிலும்பார்க்கக் கூடக் கொடுக்க முடியாது என்று எண்ணவேண்டாம். அவர் தமது குமாரனுக்குத் தம்முடைய எல்லாவற்றையும் ஒப்படைத்தார் (35-ம் வசனம்).

## உறுதிவாக்காளர் பகுதி

1. பின்வரும் உறுதிவாக்காளர் ஆனிமாதத்தில் தங்களது பிறந்த நாட்களைக் கொண்டாடுவர். இளைஞர்பக்கம் அவர்களுக்கு ஆசிகூறி, மன்றாடுகின்றது.

9. ஏ. எஸ். ஈ சாமிநாதர், (ஆனி 14).
25. அந்தோனி பெனடிற், (ஆனி 30).
30. அந்தோனி பவுலீன், (ஆனி 23).
47. மேரி யோசேப்பின் பெர்னண்டேஸ், (ஆனி 18).

2. எழுத்தாளர் மன்றம்

இளைஞர்களிடமிருந்து கட்டுரைகள், செய்யுட்கள், கதைகள், கடிதங்கள் வேண்டப்படுகின்றன. பிரசுரிக்கக்கூடியவைகள் "பாதுகாவலனில்" பிரசுரிக்கப்படும்.

---

நாமும், நமது நம்பிக்கையை யேசுவின் திருஇருதயத்தில் வைத்துப் பலனடைவோமாக!

இ. பெர்னாட்,
இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

## தொழிற்சாலைப் பெண் — யுத்தகால தாதி
## இன்று ஓர் புனிதை

எளிமையும், தாழ்மையும், அமைச்சலுமுள்ளவளாயிருந்தாள் பேர்த்தில்லா பொஸ்கார்டின். அதனுல் அவளை "மூடசிகாமணி" என மதித்தனர் மக்கள். ஆனுல், அர்ச்சியசிஷ்டவள் ஆவதே அவளுடைய ஒரே இலக்கு.

பேர்த்தில்லா பொஸ்கார்டின் சிறுமியாயிருந்த காலத்தில், தான் ஓர் கன்னியாஸ்திரியாக வேண்டுமென்ற விருப்பத்தைப் பங்குச்சுவாமியாருக்குத் தெரிவித்தபொழுது, அவ்வெண்ணத்தை மறந்து விடும்படி கூறிவிட்டார் அவர். அவளுக்குப் படிப்பில்லை, மூளையில்லை, என்றுதான்.

ஆகவே, பத்தாம்பிராயத்திலிருந்து பேர்த்தில்லா எளிய வேலைகளைச் செய்துவந்தாள். தொழிற்சாலைக்குச் சென்று தையல் வேலை பார்த்தாள். பின்பு வீட்டு வேலைக்காரியாஞள்.

வெனிசுக்கருகில்பிரென்டொலாகிராமத்தில் சீவித்த அவளுடைய அன்னை தேவபக்தியுள்ளவள். தனவந்தர் வீடுகளில் வேலைசெய்து வாழ்க்கைநடாத்தினள். பேர்த்தில்லாவின் தந்தை விசுவாசமற்றவன்; குடிகாரன். பிறரில் பக்திவாழ்வைக்கண்டால் அவனுக்குக் கோபம்வரும், கறுப்பைக்கண்ட எருது போல.

அவள் வெகுசிரமப்பட்டு, பதினுறும் பராயத்தில், கல்விகற்பிக்கும் அர்ச். டொறெத்தி கன்னியாஸ்திரிமார்சபையில் சேர்ந்தாள். இக்கன்னியாஸ்திரிமார் ரிறெவிசோவில் நடத்திவந்த வைத்தியசாலையில் உள்ள சமையற்பகுதியில் வேலைபார்க்கத் தொடங்கிஞள் பேர்த்தில்லா. பின்பு தொற்று நோயாளர் வாட்டிற்கு மாற்றப்பட்டாள். புற்று நோய்கண்டு பாயும் படுக்கையுமாஞள்.

20-ம்வயதில் புற்றுநோய்க்கு முதல் சத்திரசிகிச்சை செய்யப்பெற்றுள். அது சித்தியாகவில்லை. ஆனுல், அவள் தன் நோக்காடுகளைப் பிறருக்கு அறிவித்தாளில்லை. தாதாம்பெற்ற தாதியாகவேண்டுமென்ற கருத்துடன்படித்துக் கன்னியமாய் அரங்கேறிஞள்.

முதலாவது உலகயுத்தத்தின்போது ரிறெவிஸோ வைத்தியசாலையில் அநேக துருப்புகளிருந்தனர். அப்பட்டணம் குண்டுகளால் தாக்கப்பட்டபொழுது பேர்த்தில்லா சலியாதவீரத்துடன் பணிபுரிந்தாள். யுத்தத்தின்பின் உண்டான "ஸ்பானிய சளிச்சுரம் பரவியபொழுதும் பத்துப்பேருடைய வேலையைத் தனித்துச் செய்தாள். ஆனுல், வைத்தியசாலை அதிபர் தாயார் அவளைப் பிழையாய் விளங்கிக்கொண்டு, துரும்பைத் தூணுக்கி, கண்டனெல்லாவற்றிற்கும் கடிந்துவந்தாள். இறுதியாய், சுகத்துக்காக வென்று, மடத்துச்சலவையறையில் வேலைக்கனுப்பப் பெற்றுள். பின்வைத்தியசாலையில் வாட் வேலைக்குத் திருப்பப்பட்டாலும் தொற்றுநோயாளர் பகுதியிற்றுன் வேலை கொடுத்தனர். 1922-ம்ஆண்டு ஆரம்பத்தில் கொடிய புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருக்கக் காணப்பட்டாள்.

சத்திரசிகிச்சைசெய்து ஒன்பதுறுத்தல் நிறையுள்ள புற்றை வெட்டியபோதிலும், உயிரைக்காப்பாற்ற முடியவில்லை. மூன்றுநாட்களின்பின் ஐப்பசி 20-ம்நாள், 34-ம்பராயத்தில் பரமபதமடைந்தாள்.

ரிறெவிஸோவில் நடந்த அவளுடைய பிரேதசேமத்திற்குப்பன்னூற்றுக்கணக்கான மக்கள் வந்திருந்தனர். அன்றே அவளுடைய புண்ணிய வாழ்க்கை பெயர் பெறத்தொடங்கியது.

பத்தாம்பத்திநாதருடன் முத்திப்பேறுபெற்றபட்டம்பெற்று," மூடசிகாமணி" என மதிக்கப்பட்டவள் இம்மாதம் 11-ந்திகதி அர்ச்சியசிஷ்டவள் ஆஞள்.

## கத்தோலிக்க மாதர்சங்கங்களின்
### அகிலஉலக சம்மேளனப் பொன்விழா

**கத்தோலிக்க மாதர்சங்கங்களின் அகில உலக சம்மேளனத்தின் 50-வது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுமுகமாகச் சென்ற சித்திரைமாதம் 29-ந் திகதி முதல் வைகாசிமாதம் 5-ந் திகதிவரை ரோமாபுரியில் ஓர் மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் 2,000-க்கு அதிகமான மாதர்கள் 50-க்கு அதிகமான நாடுகளிலிருந்துவந்து கலந்துகொண்டனர்.**

சில ஐரோப்பியநாடுகளின் கத்தோலிக்கமாதர்கள் அகில உலகஅரங்கில் தங்கள்தேவைகளை உணர்ந்ததன் பயனுகவே மேற்படிசம்மேளனம் 1910-ம் ஆண்டு நிறுவப்பட்டது, கடந்த 50 ஆண்டுகளில் கத்தோலிக்க மாதர்சங்கங்களின் சம்மேளனம் மாதரின்திருத்தொண்டிற்கு அகிலஉலக விஸ்தீரணத்தை அளித்துள்ளது. இச்சம்மேளனமூலம் கத்தோலிக்கமாதரின் குரலொலி சர்வதேசஅரங்கிலும், ஸ்தாபனங்களிலும்இடம்பெற்றுள்ளது. கத்தோலிக்க மாதர் சங்கங்களின் அகிலஉலக சம்மேளனம் பல்வேறு இனங்களைச்சேர்ந்த, வெவ்வேறு அந்தஸ்துக்களிலுள்ள கத்தோலிக்கமாதர்களை உறுப்பினராகக் கொண்டுள்ளது. 61தேசங்களைச் சேர்ந்த 105 கத்தோலிக்க மாதர்சங்கங்கள் தற்போது இச்சம்மேளனத்தில் அங்கம் வகிக்கின்றன. இச்சங்கங்களில் 3,60,00,000 கத்தோலிக்கமாதர்கள் அங்கத்தவர்களாகச்சேர்ந்து தொண்டாற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் விசுவாசத்திலும், கத்தோலிக்கமாதர்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் ஒற்றுமையும் ஆர்வமுங்கொண்டு விளங்குகின்றனர்.

கத்தோலிக்கமாதரின் சர்வதேச மாநாடு திருச்சபைப் பொதுச்சங்கத்துக்கு ஆயத்தங்கள் துரிதமாக நடைபெற்றுவரும் இக்காலத்தில் கூட்டப்பட்டபடியால் "ஒற்றுமையை வளர்ப்பதில் கத்தோலிக்க மாதரின் பணி" என்றவிடயம் சிறப்பாக இம்மாநாட்டில் ஆராயப்பெற்றது. இம்மாநாட்டின் முதற்பொதுக் கூட்டத்துக்கு மகாமேன்மைதங்கிய கருதினுல் பிற்சாடோ ஆண்டவரவர்கள் தலைமை வகித்தனர். இக்கூட்டத்தில் அதிவந். பல்சன் ஷீன் ஆண்டகைஅவர்கள் கத்தோலிக்கமாதரின் சரீரமய, ஞானமய, சமூகமய தாய்மையைப்பற்றி ஓர் அரிய சொற்பொழிவாற்றி, கிறிஸ்தவஒற்றுமையை உருவாக்குவதில் கத்தோலிக்க மாதர் செய்யக்கூடிய தொண்டைத் தெளிவாக விளக்கிஞர்.

மாநாட்டின் இரண்டாவது பொதுக் கூட்டத்தில் யேசுசபையின் உதவித் தலைவரான அதிவண. ஜெறேும் டெ சௌசாசுவாமியவர்கள் தொழில்நுட்ப நாகரீகத்தின்மத்தியில் கத்தோலிக்க மாதர்கள் ஆற்றவேண்டிய தொண்டுகளைப்பற்றி விளக்கிஞர். பசிப்பிணி எனும் பிரச்சினையை அவர் சுட்டிப்பாகக் குறிப்பிட்டார். இதைத்தொடர்ந்து "மனிதன் இவ்வுலகபிடியிலிருந்து வானவெளிக்குப் பறந்துசெல்ல எத்தனித்துவரும் இக்காலத்தில் உலகில் வாழும் பெருந்தொகையான மக்கள் பசிப்பிணியால் வாடுவதைக்கண்டு நாம் வாளாவிருக்க முடியுமா?" என்றகேள்வியை ஐக்கியநாடுகளின் உணவு-விவசாய ஸ்தாபனத்தின் தலைவரான திரு. சென் (இவர் ஓர்இந்தியர்) என்பவர் எழுப்பிஞர். க. மா. ச. சர்வதேச சம்மேளனத்தின் சிரேஷ்ட ஞானவழிகாட்டியாகிய அதிவந். லமூற் ஆண்டகையவர்கள் ஐஸ்வரியவான் லாசருடைய உவமையை ஞாபகப்படுத்திப் பசிப்பிணியால் வருந்துவோர் மட்டில் கத்தோலிக்க மக்களுக்குள்ள கடமைகளைப்பற்றிச் சிறந்தமுறையில் விளக்கிக் கூறிஞர். இதைத்தொடர்ந்து இத்தாலிய கத்தோலிக்க சேவாசங்கத்தின் உபதலைவராகிய செல்வி கார்மேலா றெஸ்வி கத்தோலிக்க மாதர்சங்கங்களின் சம்மேளனம் உலகில் பசிப்பிணியைத் தீர்ப்பதற்கு இதுவரை செய்துள்ள தொண்டுகளின் வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துரைத்தார். மாநாட்டின் கடைசிப் பொதுக்கூட்டத்தில் இளங் கத்தோலிக்கமாதரின் அகில உலக சம்மேளனத்தின் தலைவியாகிய செல்வி வென்டிறிக் கத்தோலிக்கமாதர் ஒற்றுமையை வளர்ப்பதற்கு ஆற்றக்கூடியபணிகளைச் சுட்டிப்பாக விளக்கிஞர்.

மாநாட்டின் பொதுக்கூட்டங்களுக்கு இடைப்பட்டநேரங்களில் கத்தோலிக்க மாதர் தங்கள் தனிப்பட்டசீவியத்திலும், குடும்பங்களிலும், சமூகவாழ்க்கையிலும், தொழில்துறைகளிலும், தேசீய, சர்வதேசதுறைகளிலும் சடப், பொருள்வாதத்திற்கு எதிராகவும் எவ்வாறு ஒற்றுமையை வளர்க்கவேண்டும் என்ற விடயங்களைச் சிறப்புக்குழுக்கள் ஆராய்ந்து அறிக்கைகள் சமர்ப்பித்தன. இவ்வாராய்ச்சிகளுடன் மாநாட்டில் பங்குபற்றிய அங்கத்தவர்கள் அனைவரும் திவ்வியபூசைப்பலி, திருமணித்தியாலஆராதனை, ஒற்றுமைக்காகச் செபவேண்டுதல்முதலிய பத்திமுயற்சிகளிலும் ஒழுங்காகப் பங்குபற்றினர்.

இறுதியில் பரிசுத்த பாப்பரசர் மாநாட்டில் கலந்துகொண்ட சகலருக்கும் ஒருவிசேஷபேட்டி அளித்து, அவர்கள் ஒற்றுமையை வளர்ப்பதற்கு எடுத்துள்ள முயற்சிகளைப் பாராட்டியதுடன் அவர்கட்கு உற்சாகமொழிகளும் கூறியுள்ளார். ஈற்றில் தமது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதமும் அவர்கட்கு அருளிஞர். அத்துடன் கத்தோலிக்க மாதர்சங்கங்களின் சர்வதேசசம்மேளனத்தின் மாநாடு இனிதே முடிவடைந்தது. இம்மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து மூன்றுமாதர்கள் பிரதிநிதிகளாகச்சென்று மாநாட்டின் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். நம் நாட்டிலிருந்து எவருமே பங்குபற்றுமை மிகவும் வருந்தத்தக்கதே.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2570**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

சரவணையைச் சேர்ந்த
சிதம்பரப்பிள்ளை முத்தையா
—வழக்காளி

எதிராக
சரவணையைச் சேர்ந்த
1. சங்கரப்பிள்ளை விசுவலிங்கமும்
2. அவரது பெண் செல்லம்மாவும்
கரம்பனைச் சேர்ந்த
3. பொன்னம்பலம் தியாகராசாவும்
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2570-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1961-ம் வருடம் ஆடிமாதம் 8-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 4000/-மும், ரூபா 2000/-த்துக்கு 27-11-58 தொடக்கம் 13-1-61 வரை 18 வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு 233 ரூபா 07 சதமும்.

**காணி விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை 'உளுத்தன் சட்டி' பா. நில. இலா. எட்டும் காலரைக் குளியும் (ப. நி. இ. 8. குளி $4\frac{1}{2}$) அல்லது பா. நெல். இலா. பன்னிரண்டும் $\frac{3}{8}$ குளியும் (ப. நெ. இ. 12—குளி $\frac{3}{8}$), புதிதாக அமைக்கப்பட்ட கல்வீடும், மற்றும் கட்டிடங்களும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — சின்னப்பா அப்பாத்துரைக்கு உரிய ஆதனம். வடக்கு — இளையவன் பெண் கிறிஸ்ரியனுவுக்குரிய ஆதனம். மேற்கு — கணபதிப்பிள்ளை தம்புவுக்கும், காலஞ்சென்ற செல்லையா பெண் மாணிக்கத்தின் உரிமையாளருக்குரிய ஆதனம். தெற்கு — ஒழுங்கை. இதடங்கலும்.

1961-ம் ஆண்டு வைகாசி மீ 24-ந் உ.

**செ. விசாகரத்தினம்,**
**கொம்மிஷனர்.**

நம். 133, பருத்தித்துறைவீதி,
கல்லூர், யாழ்ப்பாணம்.


### நன்றித்துதி

சருவேசுரனின் இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் விசேஷ உதவியாலும், அர்ச்சியசிஷ்டர்களான பிரான்சீஸ்கு சவேரியார், யேசுவின் சிறியபுஷ்பம், சூசையப்பர், அந்தோனியார், இவர்களின் இடைவிடாத மன்றுட்டினுலும் யான் இரந்துகேட்ட மன்றுட்டுக்கள் கிடைக்கப்பெற்றேன். பூரணமாய்க் கிடைக்க இன்னும் அவர்கள் உதவிசெய்வார்களாக. பிரசுரிக்கப் பிந்தியமைக்குத் தாழ்மையுடன் மன்னிப்புக் கோருகிறேன். இவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக.

அடம்பன், — ஓர் அடியாள்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

என்றும் சகாயம்புரியும் பரிசுத்த சதாசகாயமாதாவின் கிருபையால் சென்ற வருஷ முடிவில் எனதுஇலாகாவால் எனக்குவிட்ட மாற்றஉத்தரவை இல்லாமல்செய்ததுமன்றி எனது உத்தியோகத்தின் உயர்ச்சியை 1-1-61-இல் இருந்து தந்ததற்காகவும் எனதும், எனது குடும்பத்தாருடையவும் மனமார்ந்த நன்றியறிந்த ஸ்தோத்திரத்தைத் தெரிவிக்கின்றேன். அவவுக்கு ஸ்தோத்திரமாக ஓர் பாடற்பூசையும் 24-5-61-இல் வைப்பித்தேன். என்றும் எனக்கும், என் குடும்பத்திற்கும் சகாயம் புரியுமாறு வேண்டுகின்றேன். மாதாவின் நாமம் எங்கும் புகழப்படுவதாக!

மாதா மைந்தன்

தாண்டவன்வெளி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாச வேளை

— நமது நிருபர் அமலன்

- பிரான்சீசின் சங்கீர்த்தனம்
- எதிர்கால ஜனதிபதினி
- பாப்பு அறிந்த மொழிகள்
- கொலம்பசும் காகரினும்
- இத்தாலிய பிரதமர்
- மதக் கணக்கீடு

அம்மா: நேற்று கோயிலுக்குள் செபம் சொல்லிக்கொண்டிருந்தேன். கொஞ்சப்பையன்கள் பாவசங்கீர்த்தனத்துக்கு வந்தவர்கள் கோயிலுக்குள் கதைத்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். சுவாமியார் வந்ததுதான் தாமதம், போட்டிபோட்டுக்கொண்டு தொட்டியுண்டை ஓடிப்போனார்கள். கொஞ்சமாவது ஆயத்தம் செய்ய வேண்டாமா?

அப்பா: பையன்கள் மட்டுமென்ன? பலவளர்ந்தோரும் அப்படித்தான். ஏதோ சுவாமியாரிடம் சில பாவங்களைச் சொல்லிவிட்டால் கடமைமுடிந்துவிட்டதென எண்ணுகின்றனர். ஆயத்தம் செய்வதில் அக்கறை காண்பிப்பதில்லை.

பெரியண்ணா: பத்திமா காட்சி பெற்ற சிறுவன் பிரான்சீஸ் தனது கடைசிப் பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தம் செய்தவிதம் எமக்கோர் முன்மாதிரிகை. சிலமாதங்கள் நோயினால் வருந்தியபின் தன்முடிவு நெருங்குவதையுணர்ந்து தனது கடைசிப்பாவ சங்கீர்த்தனத்துக்கு ஆயத்தம் செய்தான். அப்போது அவனுக்கு வயது பத்துவருடங்களும் ஒன்பது மாதங்களும்.

நிர்மலா: இந்த வயதிலா?

அகஸ்ரீன்: ஆமாம். பிரான்சீசின் தமக்கை தெரேசா அவன் விருப்பப்படி லூசியாவைக்கூட்டி வந்தாள். எல்லோரையும் அறைக்குவெளியே அனுப்பியபின், "லூசியா விரைவில் யான் மரணமடைவேன். எனது ஈறுந்த சங்கீர்த்தனத்துக்கு ஆயத்தம்செய்வதற்காக, யான்செய்ததவறுகள் ஏதாவதை நீ அறிந்தால் கூறு" எனப்பிரான்சீஸ் கேட்டுக் கொண்டான்.

அஞ்சலா: தனது பாவங்களையிட்டு இன்னொருவருடன் சம்பாஷித்த அச்சிறுவன் உண்மையில் ஒரு புனிதன்.

அகஸ்ரீன்: "உனதன்னை வீட்டிலிருக்கும்படி கட்டளையிட அதைமீறி அவளுக்குத் தெரியாமல் என்னிடம் பலசந்தர்ப்பங்களில் வந்திருக்கிறாய்" என லூசி அச்சிறுவனின் குற்றங்களை நினைவுறுத்தினாள். பின்னர் பிரான்சீஸ் தனது தங்கையிடம் லூசியை அனுப்பினான்.

அன்ரன்: தங்கையிடமுமா கேட்டான்.

கார்மெலா: பின்னே உன்னைப் போலவா? நீயும் சங்கீர்த்தனத்துக்குப்போகுமுன் என்னுடன் கலந்தாலோசிப்பது நல்லது.

அன்ரன்: உன்னைப்பற்றி என்னிடம் கேட்டால் கூடை கூடையாய் அளப்பேனே!

அம்மா: இரண்டுபேரும் வாயை மூடிக்கொண்டு அத்தானைப் பேசவிடுங்கோ.

அகஸ்ரீன்: எங்கள் பகுதிப்பையன்கட்கும் மற்றப்பகுதிச் சிறுவருக்குமிடையே ஒருகலகம் நடந்தபோது பிரான்சீசும் எங்கள் பகுதியினருடன் சேர்ந்து மற்றவர்கள்மேல் கற்களால் எறிந்தான்" என யசிந்தா கூறியனுப்பினாள். "இக்குற்றங்களை நான் முன்னர் சங்கீர்த்தனத்தில் கூறினேன். எனினும் மீண்டும் கூறுவேன். எனது பாவங்களை இறைவன் மன்னிக்க வேண்டுமென் நீயும்யசிந்தாவும் வேண்டிக்கொள்ளுங்கள் எனப்பிரான்சீஸ் லூசியாவைக் கேட்டுக்கொண்டான்.

அப்பா: பாவசங்கீர்த்தனத்தின் வெற்றி நல்லாயத்தத்திலேயே தங்கியுள்ளது அதிருக்கட்டும். பாப்பரசர் ஆங்கிலஅரசியுடன் பிரான்சிய மொழியில் சம்பாஷித்தாரெனப் பத்திரிகையில் படித்தேன். ஏன் அவருக்கு ஆங்கிலம் தெரியாதோ?

பெரியண்ணா: அருளப்ப தந்தை திருச்சபையின் தலைவராகத் தெரியப்பட்டபின்னர் பலமொழிகளையும் அறிவதில் அக்கறை காட்டி வருகிறார். தமது காரியதரிசியான அயர்லாந்தைச் சேர்ந்த தோமஸ் ருயன் சுவாமியாரிடம் ஆங்கிலம் கற்றுவருகிறார். பாப்பரசரின் ஆங்கிலக்கல்வி செவ்வனே நடைபெறுகிறதென அக்குரவர் அண்மையில் தெரிவித்திருக்கிறார்.

இயூஜின்: சிலமாதங்கட்குமுன்னர் மார்கிறேட் இளவரசியும், தாய் ராணியும் பாப்பரசரைச்சந்தித்தபோது "சீமாட்டிகளே உங்களுடன் ஆங்கிலத்தில் உரையாடமுடியாமலிருப்பதற்கு வருந்துகிறேன். யான்விரைவில் கற்கவிருக்கும் மொழி ஆங்கிலந்தான்" எனக்கூறினாராம். அன்றுமாலை அமெரிக்காவைச்சேர்ந்த கருதினால் ஸ்பெல்மன் ஆண்டவருக்குப் பேட்டியளித்தபோது "ஒருநாள், யான் ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெறுவது நிச்சயம்" என்றாராம்.

அம்மா: பாப்பாண்டவருக்கு எத்தனை பாஷைகள் தெரியும்?

அகஸ்ரீன்: இத்தாலியமொழி அவரதுதாய்மொழி. பிரான்சியமொழியில் புலமை மிக்கவர். பல்கேரிய, துருக்கிய, கிரேக்க, ருஷியமொழிகளைப் பேசமுடியும். வேறு 5மொழிகளில் பேசுவதை விளங்கிக்கொள்வார். கடந்த பாஸ்கா திருநாட் சொற்பொழிவைத் தொடர்ந்து பதினறு மொழிகளில் வானொலியில் வாழ்த்துக் கூறினாராம்.

பெரியண்ணா: பாப்பாண்டவரை அண்மையில் இத்தாலிய பிரதமர் பன்பானி பேட்டிகண்டாராம். பன்பானி உத்தம கத்தோலிக்கர் கடமையிற் கருத்தும் கண்டிப்பு முள்ளவர். கடந்தயுத்தத்துக்குப்பின் இன்றுவரை இவரதுகட்சியே ஆட்சிப்பீடத்திலிருந்து வருகிறது. கட்சியின்காரியதரிசி, பிரதமர், வெளிநாட்டமைச்சர் ஆகிய மூன்று பொறுப்புள்ள இலாகாக்களையும் திறமையுடன் நிர்வகித்துவருகின்றார்.

அகஸ்ரீன்: குடும்பக் கட்டுப்பாட்டை வெறுக்கும் இந்தமனிதருக்குப் பலகுழந்தைகள் உண்டு. காலையில் எட்டுமணிக்குக் காரியாலயம் சென்று கடமையில் மூழ்குபவர் மாலை எட்டு மணிக்குத்தான் அங்கிருந்து வெளியேறுவார். "நான் நாட்டைப் பரிபாலிக்க, நீ வீட்டை நிர்வகி" என இல்லப்பொறுப்பை இல்லாளிடமே விட்டுவிட்டார். பலம்வாய்ந்த பொதுவுடைமைக்கட்சியின் எதிர்ப்புகளிடையே இவ்ரது திறமைமிக்க நிர்வாகத்தால் இத்தாலி ஜனநாயக சுதந்திரத்தை அனுபவிக்கிறது.

இயுஜீன்: தலைவர்கள் பிறக்கும்போது, சிறுவர்களாயிருக்குஞ்சமயம் அவர்களின்செயல்கள் எதிர்காலத்தில் நாட்டை வழிநடத்திச் செல்லக்கூடியவர்கள் என்பதைக் காட்டுமாம்.

அகஸ்ரீன்: இந்தவார்த்தை ஒரு சம்பவத்தை எனக்கு நினைவூட்டியது. அண்மையில் ரைம்ஸ் சஞ்சிகையில் ஒரு புகைப்படத்தைப் பிரசுரித்திருந்தார்கள். அதிபர் கென்னடியின்புதல்வி கரோலின், அம்மாவின் சப்பாத்தைத் தன்காலில் போட்டுக்கொண்டு நடக்க முயற்சிப்பதைக் கென்னடி தம்பதிகள் பார்த்து மகிழ்கின்றனர். இப்படத்தில் ஜனதிபதினி ஜாக்குலின் கென்னடி பத்திரிகை நிருபர்களுக்கு ... "எனதுமகள் பிற்காலத்தில் அமெரிக்க ஜனதிபதியொருவருக்கு மனைவியாகி வெள்ளை மாளிகைக்கு வருவாளென்பதை இச்செயல் காட்டுகின்றதென"க் கூறினளாம்.

பெரியண்ணா: அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்மகனையும் தாலாட்டும்போது பிற்காலத்தில் ஜனதிபதியாக வருவாயெடாஎனத் தாயார் பாடுவாளாம். பெண்குழந்தையை ஜனதிபதிக்கு வாழ்க்கைப்படுவாயென வாழ்த்துவாளாம்.

அப்பா: ஆமாம், சிறுகுழந்தையிலேயே உயரியஎண்ணங்களைப் புகுத்துகின்றனர் அங்கு; மாமா அடித்தானு சொல்லு அடிக்க எனத் தீயஎண்ணங்களைப் புகுத்துகின்றனர் இங்கு.

நிர்மலா: அப்படி வளர்ப்பதனாற்றான் தன்னம்பிக்கைமிக்க துணிவான சாதனைகளையாற்றக் கூடிய வீரர்கள் பலர் மேல்நாடுகளில் உதயமாகினர்.

இயுஜின்: இல்லையேல் உலகிலேயே ஒப்புயர்வற்றவீரனாக எண்ணப்படும் முதல் வானவெளிமனிதன் காகரின் இங்கேயல்லவா உதித்திருப்பான்.

அகஸ்ரீன்: பாப்பரசரின் பத்திரிகையை வாசிக்கும்வரை நானும் அப்படித்தான் எண்ணியிருந்தேன். காகரின் செய்த சாதனை மிகச் சிறந்ததுதான். எனினும், ஒப்பற்றவீரனென அவரை மதிக்கமுடியாது. ஏனெனில், காகரின் தன் கட்டுப்பாட்டுக் கடங்கக் கூடிய ஏவாயுதத்தில் பயணஞ்செய்தார். பூமியுடன் தொடர்புகொள்ள எல்லாவசதிகளுமிருந்தன. பாதுகாப்புச் சாதனங்களுடன் நவீன ஆய்வுக்கருவிகள் பலவும் இணைக்கப்பட்டிருந்தன. வழிகாட்டவும் பவனஅமுக்கம் பற்றி அறிவிக்கவும், ஆபத்திலுதவவும் விஞ்ஞானிகள் பலர் தயாராயிருந்தனர். எனவே, ஒப்பற்ற வீரர்என்ற கௌரவத்துக்குக் காகரின் உரியவராகார். ஆயின், புதுஉலகத்தைக் கண்டுபிடித்த கொலம்பசுக்கு இந்தக்கௌரவம் பொருந்தும். அவருக்குத் தன்னம்பிக்கையொன்றே உதவியாய் இருந்தது. தான்கண்டுபிடித்தவொரு உண்மையை நிரூபிக்க, ஆழ்கடலையளக்கும் கருவியையும், விண்மீன்களையும்மட்டுமே துணைக்கொண்டான். பித்தனெனக் கொலம்பசைப் பரிகசித்தவர்பலர். அவருடன் சென்றவரும் கொந்தளிக்கும் கடல்கண்டு, நம்பிக்கையிழந்து தூஷித்தனர். ஆதரவற்றநிலையில், உயிருக்கே பெருமோசம் சூழ்ந்த தருணத்தில் தன்னம்பிக்கையால் அஞ்சாநெஞ்சுடன் கருமமாற்றிச் சித்தியடைந்த கொலம்பசே ஒப்பற்ற வீரனாவான்என றோமன் அவதானி கூறுகிறது.

நிர்மலா: கொலம்பசைப்பற்றி ஐந்தாம்வகுப்பில் படித்தேன். அவரது வரலாறுகேட்பதற்குச் சுவைமிக்கது. வீரசாகசங்கள் நிறைந்தது.

கார்மெலா: ஏன் அண்ணா, கத்தோலிக்கமதத்தைச் சார்ந்தவர்கள்தானே உலகில் அதிகமானோர்?

பெரியண்ணா: ஆம், ஏன் உனக்குச் சந்தேகம்?

கார்மெலா: கொன்பிசியுஸ் மதம்தான் உலகிலேயே அதிகமானோர் வழிபடும் மதமென எங்களாசிரியை கூறினா.

அகஸ்ரீன்: அது தவறு. அண்மையில் உலகின் மிகப்பெரிய மதங்களை வழிபடுவோர் பற்றிய கணக்கீடு ஒன்று வெளியிடப்பட்டுளது. அதன்படி கத்தோலிக்கர்கள் 52 கோடி, முஸ்லீம்கள் 42 கோடி, இந்துக்கள் 32 கோடி, கொன்பிசியுஸ்கள் 30 கோடி, பௌத்தர் 25 கோடி, புரொட்டஸ்தாந்துகள் 15 கோடி, எந்த மதத்தையும் அனுசரியாதவர்களாக 42 கோடி மக்கள் இருக்கிறார்களாம்.

அம்மா: அதுதானே நாங்கள் எங்கள் செபத்தில் "அவர்களெல்லாம் எங்களுடன் சேர்ந்து ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாயிருக்கவேண்டுமென" மன்றாடுகிறோம்.

# கத்தோலிக்க செய்திகள்

## குடும்பத்தாயின் இடமாகமரித்த கன்னியாஸ்திரியின் ஞாபகசின்னம்

1945-ம் ஆண்டில் பிரான்சிய எதிர்ப்புகளுக்கு உதவிசெய்ததுக்காக நாசிப் போர்வீரரால் கைதுசெய்யப்பட்டு, றவென்ஸ்பேக்கிலுள்ள அகதிகள்முகாமொன்றிலே சிறைவைக்கப்பட்ட குடும்பத்தாய் ஒருத்திக்காகத் தனது உயிரையே தியாகஞ்செய்த சங். எலிசபெத்தாயாரின் ஞாபகமாகப் பிரான்சு தேசத்தில் அவருடைய உருவப்படங்கொண்ட முத்திரையொன்று வெளியாகியுள்ளது.

## வத்திக்கான் நிழற்பட நிபுணருக்கு 'செவாலியர்' பட்டம்

வத்திக்கானின் உத்தியோக பூர்வமான போட்டோ கலைஞரான லுய்கி பெலிச்சி என்பவருக்குப் பரிசுத்த தந்தையவர்கள் 'அர்ச். சில்வெஸ்தர் அணியின் செவாலியர்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கியுள்ளார். இந்தப் பெலிசி குடும்பம் இரண்டு தலைமுறைகளாக வத்திக்கானுக்குப் போட்டோக் கலைஞர்களைத் தந்துள்ளது. லுய்கி பெலிச்சியின் தந்தை 1903-ம் ஆண்டில் 13-ம் சிங்கராய பாப்பாண்டவரால் வத்திக்கானின் போட்டோ கலைஞராக நியமிக்கப்பட்டார்.

## 120 அடி நீளமான பீடம்

சம்பத்திரிசியாரின் நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடுமுகமாக 120 அடி நீளமான, பிரமாண்டமான பீடமொன்று அயர்லாந்து தேசத்திலுள்ள குரோக் பூங்காவில் அமைக்கப்படவிருக்கின்றது. இதுவே, அயர்லாந்திலுள்ள மிகப்பெரிய பார்வையாளர் மைதானம். இந்தப் பீடத்தில் எதிர்வரும் ஆனிமாதம் 25-ந் திகதி மேற்றிராணியாரின் பெரிய பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படவிருக்கின்றது. இந்தப்பூசையில் 100,000பேர் பங்கு கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 9 கருதினால்மாரும், 250 மேற்றிராணிமாரும் அங்கு சமுகமளிப்பார்கள். பீடம் கண்ணாடியால் மூடப்பட்டிருக்குமாதலால் அது எல்லோராலும் காணக்கூடியதாயிருக்கும்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday June 3-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org